Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி -13 | 27-06-2005 | திங்கட்கிழமை | ஓசை 129




கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464.

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12120)



## பிரிட்டனிடம் தரையிறக்க போர்க்கப்பல் கொள்வனவு செய்ய சிறிலங்கா நடவடிக்கை

(கொழும்பு)

பிரிட்டனிடம் இருந்து சேர் கலகாட் போர்க்கல தரையிறக்க போர்க் கப்பலை கொள்வனவு செய்ய சிறிலங்கா முப்படைத் தளபதி தயாசந்தகிரி பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் போர்க் கப்பலின் விலை பத்து மில்லியன் ஸ்ரேலிங் பவுண் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் இந்தக் கப்பலுக்காக செலவிடப்பட வேண்டிய தொகையும் ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண் ஆக இருக்கும்.

தயா சந்தகிரியின் இப்பரிந்துரை தொடர்பாக கொள்வனவுக்கு அரச குழு கடந்த வெள்ளிக்கிழமை ஆய்வு நடத்தியது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தலைமையிலான இக்குழுவில் முன்னாள் சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சிறில் ஹேரத், முன்னாள் கடற்படைத் தளபதி பசில் குணசேகர, விமானப்படை முன்னாள் தளபதி மெண்டிஸ் மற்றும் பிரான்சிற்கான சிறிலங்காத் தூதுவராக இருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் சென்ற புலிகளின் வாகனம் மீது கண்ணிவெடித் தாக்கு

## 50 போராளிகள் மயிரிழையில் தப்பினர்

(மட்டக்களப்பு)

**கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அடங்கிய அரசியல் பணிப் போராளிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் போராளி ஒருவர் காயமடைந்துள்ளார். நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் வெலிக்கந்த மன்னம்பிட்டிய போவத்த என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.**

கிளிநொச்சியிலிருந்து அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அடங்கிய 50 அரசியல் போராளிகள் தரைமார்க்கமாக முற்பகல் பத்து மணியளவில் ஓமந்தை சிறிலங்கா படை சோதனைச் சாவடியிலிருந்து சிறிலங்கா படையினரின் வாகனத் தொடர் பாதுகாப்புடனும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடனும் மட்டக்களப்பிற்கான பயணத்தை மேற்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெவ்வேறு சம்பவங்களில் ஆறு துணைப்படை வீரர் வீரச்சாவு

(அலுவலக செய்தியாளர்)

வெவ்வேறு சம்பவங்களில் தமிழீழ தேசியத் துணைப் படை வீரர்கள் ஆறு பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

07.07.1992 அன்று கல்வரப்பு என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவம் பதுங்கித் தாக்கிய போது தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

த.தே.து.ப வீரர் - மதிவதனன்/பாலசிங்கம் (புண்ணியம் - பாலசிங்கம் பூமரத்தடிச் சேனை ஈச்சிலம்பற்று) என்பவரே சாவடைந்துள்ளார்.

18.04.2003 அன்று மூதூர் இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் காடையர்களின் தாக்குதலின் போது தமிழீழ தேசிய துணைப்படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

த.தே.து.ப.வீரர் - கமலதாசன் (தர்மலிங்கம் கமலதாசன் (ரஞ்சன்) கடற்கரை சேனை மூதூர் த.மு 5ஆம் வட்டாரம் சம்பூர்) என்பவரே வீரச்சாவடைந்துள்ளார்.

28.09.2002 அன்று எதிர்பாராத வெடிவிபத்தின் போது தமிழீழ

(12 ஆம் பக்கம் பார்க்க)

–விளையாட்டு நிகழ்வில் ஏற்றப்பட்ட–

## தமிழீழ தேசியக்கொடியை இறக்குமாறு காரைநகரில் படையினர் அடாவடித்தனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், வியாவில் சனசமூக நிலையத்தால் நேற்று பி.ப 3.00 மணிக்கு நடாத்தப்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கான மெய்வல்லுநர் போட்டியின் போது ஏற்றப்பட்ட தமிழீழத்தேசியக் கொடியை இறக்குமாறு அங்கு மது போதையில் வந்த சிறிலங்கா கடற்படையினரும், பொலிசாரும் அங்கு நின்ற பொதுமக்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளனர். ஏற்றப்பட்ட தமிழீழத்தேசியக் கொடியை இறக்க பொதுமக்கள் மறுத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யு.என்.எச்.சி.ஆர். அலுவலர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் கடலில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் மன்னார் யூ.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் கடமையாற்றுகின்ற நால்வர் கடலில் குளிக்கச் சென்ற வேளையில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நிமால் பீரிஸ் (வயது-40) என்ற யூ.என்.எச்.சி.ஆர். அலுவலக மொழி பெயர்ப்பாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(18)

## போராளிகளின் வாகனம் மீதான தாக்குதல்; சிறிலங்கா படையினரின் சூழ்ச்சி நடவடிக்கை

- மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்டனம்

(மட்டக்களப்பு)

படையினருக்கு கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றும் புதிதல்ல. அவர்கள் நினைத்திருந்தால் தாக்குதல் அச்சுறுத்தல் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பகுதிகளிலே அவர்களுடைய வீரர்களை அனுப்பி அப்பகுதிகளில் கண்ணி வெடிகள் இருக்கின்றனவா என்பதைப் பார்த்திருக்க முடியும். ஆகவே இத் தாக்குதலில் ஏதோ ஒரு சூழ்ச்சி-வேண்டுமென்றே ஒரு புறக்கணிப்பாக நடந்து கொண்டமையை காணக் கூடியதாக உள்ளதாக விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து வெலிக்கந்தைப் பகுதி ஊடாக மட்டக்களப்பிற்கு இராணுவ மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடன் சென்ற விடுதலைப்புலிகளின் வாகன அணி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு இளந்திரையன் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை அலுவலகம் மீது பொத்துவிலில் தாக்குதல்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று கோமாரியிலுள்ள பொத்துவில் பிரதேச தமிழீழ அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று இனந்தெரியாத குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத மூன்று பேர் கொண்ட குழுவினர் அரசியல்துறை அலுவலகத்துக்குள் நுழைந்து இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலில் கதவுகள், யன்னல்கள் மற்றும் அலுவலக பயன்பாட்டுப் பொருட்கள் அனைத்தும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**10 நிமிடத்தில் படங்கள்!!!**

பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப்படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். அவசரத் தேவைக்காக டிஜிட்டல் அல்பம் 24 மணி நேரத்தில் செய்து வழங்குகின்றோம். யாழ்.ஒளி K.S.R PHOTOS இல:05 கனகபுரம் தெரு கிளிநொச்சி. (6294)

**தவறிவிட்டது**

ம.சசிகரன் இல:16 சரசம்பாள் கோயிலடி வட்டக்கச்சி என்பவருடைய நி.பயண அட்டையும் தேசிய அடையாள அட்டையும் (861793648V) வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கு அருகாமையிலுள்ள சண்முகம் தேநீர்ச்சாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வட்டக்கச்சி வன்னியன் தொ.தொடர்பு நிலையத்தில் அறிவமுது பொத்தகசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல்: ம.சசிகரன். (6304)


# மாலைநேர கற்றலுக்காக கட்டடத்தொகுதி அமைப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் முள்ளியவளைப் பிரதேசத்தில் மாலை நேர கல்வி வகுப்புக்கான கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி அமைக்கப்படும் மாலை நேர கல்வி வகுப்பு கட்டடத்தில் அப்பகுதி சிறார்களின் கல்வி நலனை கருத்திற்கொண்டு முன்பள்ளியும் இயங்கவுள்ளது. மேற்படி கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று எதிர்வரும் மாத நடுப்பகுதியில் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஆ)

# யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியுடன் நடமாடும் மருத்துவ சேவை

(மன்னார்)

மன்னாரில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியுடன் யுத்தகாலத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட கிராமங்களில் நடமாடும் மருத்துவசேவையினை நடத்தி வருகின்றது.

இதன் மூலம் மாந்தைமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆண்டான்குளம், அடம்பன் சின்னவலயன்கட்டு மற்றும் மடு உதவி அரசஅதிபர் பிரிவிலுள்ள பண்டிவிரிச்சான், தட்சனா மருதமடு போன்ற இடங்களிலும் நானாட்டான் பிரதேசத்திலுள்ள மடுக்கரை போன்ற இடங்களிலும் இம்மருத்துவ சேவையினை நடாத்தி வருகின்றது. (18)

# உளநல நோயாளர்களுக்கான சிகிச்சை முல்லை.மா.வைத்தியசாலைக்கு மாற்றம்

(முல்லை)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் எதிர்வரும் 29.06.2005 அன்று நடைபெறவிருந்த உளநல பாதிப்படைந்த நோயாளிகளுக்கான சிகிச்சை அதே திகதியில் காலை 10 மணிக்கு முல்லைத்தீவிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறுமென முல்லை. மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.விஜெயக்குலராசா தெரிவித்தார். சுனாமி அனர்த்தத்தால் உளநலபாதிப்படைந்தவர்கள் முல்லை.நகர்ப்பகுதியில் அதிக அளவில் இருப்பதனால் தற்போது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை வசதியைப் பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இச்சிகிச்சையினை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் மேற்கொள்ளுவார் எனவும் அவர் தெரிவித்தார். (20)

## கையளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பொது மண்டபத்திறப்பு விழாவும், வீதிகள், குளம் கையளிப்பும் கடந்த வெள்ளிக்கிழமை கிராமத் தலைவர் தலைமையில் இடம் பெற்றது.

மங்கல விளக்கினை மாயவனூர் பிரதேச கிராம சேவையாளர் ரூபகுலசிங்கமும், வட்டக்கச்சிப் பிரதேச பொருண்மிய இணைப்பாளர் றொஜிட்டும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து கட்டடத்திறப்பு விழா ஞாபகார்த்தமாக மரநடுகையினை பெருமாள், ஜேசுபாலன் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

புதிதாக அமைக்கப்பட்ட பொது மண்டபத்தினை கிளி.மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் கந்தசாமி திறந்து வைத்தார்.

# குழந்தைகளின் ஆற்றல், அறிவிற்கேற்ப அனைவரும் திட்டமிட்டு செயற்பட வேண்டும்

## –சிறார்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சோ. தங்கன்

(அலுவலக செய்தியாளர்)

குழந்தைகளின் ஆற்றலுக்கும், அறிவுக்கும் எட்டாதவற்றை திணிப்பதை விடுத்து அவர்களின் ஆரோக்கியமான மேம்பாட்டிற்கு அனைவரும் திட்டமிட்டு செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

இவ்வாறு தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இலவச மழலைகள் கணினிப்பூங்காவில் கற்ற சிறார்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;இன்று தமிழீழ மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்டு வரும் மழலைகள் இலவசக் கணினிப்பூங்காவில் கற்கை நெறியை முடித்துக்கொண்டு தகைமைக்கான சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக இங்கு குழந்தைகள் கூடியிருக்கின்றனர்.

இந்த மழலைகள் இந்தக் கணினிப்பூங்காவிலேயே தங்களுடைய ஆரம்ப கணினி அறிவைக் கற்று ஆர்வத்தோடு சான்றிதழை பெறுவதற்காக கூடியிருக்கின்றார்கள். அவர்கள் கற்ற கல்வியின் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களாகிய நீங்கள் இந்த அற்புதமான, சந்தோசமான நிகழ்வினை காண்பதற்காக இந்த மண்டபத்திலே கூடியிருக்கின்றீர்கள். லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய அனுசரணையோடு தமிழீழ மாணவர் அமைப்பினால் இந்தக் கணினிப்பூங்கா நடாத்தப்பட்டு வருகின்றது. எங்களுடைய தாயகத்தில் நீண்ட கால பெரும் யுத்தத்தின் பின்னர் இந்தக் குழந்தைகளுக்காக கணினிப் பூங்கா ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பத்திலேயே கணினியை கற்றுவந்த குழந்தைகளுக்கு மாணவர் அமைப்பு இன்று சான்றிதழ்களை வழங்குகின்றார்கள். எங்கள் தாயகத்தின் வருங்கால சிற்பிகளாக விளங்கும் இந்தக் குழந்தைகள் இந்தத் தாயகத்திலே ஒரு ஆற்றல், அறிவு மிக்க குழந்தைகளாக வளர்க்கப்படவேண்டும் என்பதில் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளார். அந்த உழைப்பின் பயனாகவே தான் இந்தக் குழந்தைகளுடைய வருங்காலத்தை முன்னிட்டு இவர்களின் ஆற்றலையும், அறிவினையும் வளர்த்துக் கொள்வதற்காக பல முன் பள்ளிகள் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினூடாக செயற்படுத்தப்பட்டுள்ளது. மாணவர் அமைப்பு உள்ளிட்ட பல பிரிவுகளும் இணைந்து உழைத்து இந்தக் குழந்தைகள் ஆற்றலோடு வளரவேண்டும் நல்ல அறிவாளிகளாக வளரவேண்டும், எங்கள் குழந்தைகள் எங்கள் தாயகதேசத்தில் அற்புதம் படைக்கக் கூடிய குழந்தைகளாக வளரவேண்டும், என்கின்ற அவாவினோடு அவர்களின் பெற்றோர்களும் அயராது உழைப்பதை இன்று காணக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் எங்கள் காலத்தின் தேவை இந்தக் குழந்தைகளுக்கு போதுமான கல்வியைப் போதிக்க வேண்டியதேவை எங்களுக்கு இருக்கின்றது. குழந்தைகளின் ஆற்றலுக்கும், அறிவுக்கும் எட்டாதவற்றை அவர்களின் மீது திணிப்பதைத் தவிர்த்து அந்தந்த காலத்தில் குழந்தைகளின் வளர்ச்சிக்கேற்றதாக அந்தக் குழந்தைகளும் அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக கல்வியினைப் போதிக்கக் கூடிய வழிகளை நாங்கள் திட்டமிட வேண்டும். எனவே இந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டு உழைக்கின்ற அமைப்புக்கள் மற்றும் பெற்றோர்களும் குழந்தைகளின் ஆற்றலுக்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். எனவே நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது தேசியத் தலைவரின் உயரிய சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்து எமது தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இந்தச் சிறார்களின் ஆற்றலையும், அறிவையும் வளர்க்க துணை நிற்கவேண்டும் என்றார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் ஏற்றிவைக்க, தொடர்ந்து மங்கல விளக்கேற்றலோடு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகி கணினிப் பூங்கா சிறார்களின் கலை நிகழ்வுகளும், தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய அனுசரணையோடு தமிழீழ மாணவர் அமைப்பினால் நடத்தப்படும் மழலைகள் கணினிப் பூங்காவின் முதலாம் பகுதி மாணவர்களுக்கே இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சான்றிதழ்களை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், கணினிப்பூங்கா கற்கை நெறி இணைப்பாளர், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர், மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊடகப் பொறுப்பாளர், தமிழர்புனர்வாழ்வுக்கழக கல்வி அபிவிருத்தித் திட்டப்பணிப்பாளர் மற்றும் கணினிக்கற்கை நெறி ஆசிரியர்கள் ஆகியோர் வழங்கிக்கௌரவித்தனர். (ச)


# முல்லை நுண்கலைக்கல்லூரியின் ஆனி மாத தமிழிசை விருந்து

இடம்: முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி கலா மண்டபம்.

காலம்: இன்று (27.06.2005) மாலை 4.00மணி.

பாட்டு: திரு.S.N.சுபாகரன் (B.Music) (சிதம்பரம்-அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

வயலின்: இசைக்கலாவித்தகர்-செல்வி க.றஞ்சனா.

மிருதங்கம்: நுண்கலைமாணி திரு.க.கண்ணதாசன்.

கெஞ்சிரா: வித்துவான் திரு.இரா.சிவராமன்.

கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நுண்கலைக் கல்லூரியினர்.

(சி.12237)


# சாவு அறிவித்தல்



## வடிவேலு சிவசோதி

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சிவசோதி அவர்கள் 26.06.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான வீரகத்தி இலட்சுமிப்பிள்ளையவர்களின் அன்புமகளும் காலம் சென்ற வடிவேலுவின் பாசமிகு மனைவியும், வரலட்சுமி (அமரர்), யோகமலர், யோகராணி, (அமரர்) யோகரஞ்சினி, கணேசலிங்கம், மகாதேவன் (மலேரியாத்தடைப்பகுதி), மனோகரன் சச்சிதானந்தம்(டோகா), கோமதி ஆகியோரின் அன்புத்தாயாரும் (அமரர்) ஞானியற்கரசன், முத்துத்தம்பி, இராசதுரை (பாண்டியன்குளம்), சுபேந்தினி, புஸ்ப பவாணி, நஞ்சிதமலர் அவர்களின் பாசமிகு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27.06.2005 (இன்று) 10.00 மணியளவில் அன்னா ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

5 ஆம் யூனிற்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(6365)

தகவல்:–
குடும்பத்தினர்.

# ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படையினர் வாபஸ் பெற காலக்கெடு எதுவும் கிடையாது


(வோஷிங்டன்)

**ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற காலக்கெடு எதுவும் கிடையாது என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.**

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீது முன்னாள் அதிபர் சதாம் ஆதரவுப் படையினர் தற்கொலைப் படைத் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர். ஈராக் பிரதமர் இப்ராகிம் அல்-ஜபாரி இது தொடர்பாக அமெரிக்க அதிபர் புஷ்சை வோஷிங்டனில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பின் நிருபர்களிடம் அதிபர் புஷ் கூறியதாவது;

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை விலக்கிக் கொள்ள காலக்கெடு எதுவும் கிடையாது. அங்கு இன்னும் பல முக்கிய பணிகள் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதை அந் நாட்டு பிரதமரிடம் எடுத்துக் கூறினேன். ஈராக்கியர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முழு அளவில் பயிற்சி பெற்ற பிறகு தான் அது பற்றி பரீசிலிக்க முடியும்.

காலக்கெடு வழங்கினால் எதிரிகளிடம் நாம் பணிந்து போவதாக பொருள்படும். இந்த எதிரி வீழ்த்தப்பட வேண்டியவர். இது கடுமையான பணி தான், இருப்பினும் அதை நிறைவேற்றாமல் அமெரிக்கப் படை அங்கிருந்து திரும்பாது. ஈராக்கியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் அமெரிக்கப் படைகளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்பது தான். எதிரிகளின் குறிக்கோள் அது நிறைவேறாது. இவ்வாறு அதிபர் புஷ் கூறினார். ஈராக் விவகாரத்தை அதிபர் புஷ் கையாளும் விதம் அவரது கட்சியைச் சேர்ந்த சிலருக்கே அதிருப்தி அளிப்பதாகவுள்ளது. சமீபத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில் 59 சதவீதம் அமெரிக்க மக்கள் ஈராக் மீதான அமெரிக்க அதிபர் புஷ் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜோர்ஜ் புஷ்



மொசூலில் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பொலிஸ் தலைமைச் செயலகக் கட்டடத்தை ஒரு ஈராக்கியர் அவதானிக்கின்றார்.

## இராணுவ தேநீர் கடையில் தற்கொலைத் தாக்குதல் ஈராக்கில் 23 பேர் உடல் சிதறிப் பலி; 29 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 31 பேர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

ஈராக்கில் தினந்தோறும் ஏதாவது ஒரு இடத்தில் தற்கொலைத் தாக்குதல் அல்லது கார்க்குண்டுத் தாக்குதல் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் பாக்தாத் நகருக்கு வடகிழக்கே உள்ள காலேஸ் நகரில் இராணுவ தேநீர்க கடையில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 23 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 29 பேர் காயமடைந்தார்கள். அந்தத் தாக்குதல் நடந்த ஒரு மணி நேரத்தில் தெற்கு பாக்தாத்தில் பொலிசார் சென்ற வாகனங்கள் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடந்தது. அதில் எட்டு பொலிசார் பலியானார்கள்.



மொசூலில் நேற்று கார்க்குண்டுத் தாக்குதலிற் குட்பட்ட பொலிஸ் நிலையத்திற் கூடாக ஒரு பொலிசார் நடந்து செல்கிறார்.

## தீவிரவாதிகள் தாக்க திட்டம் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

நேபாளத்தில் அமெரிக்கர்களுக்கு எதிராக அங்குள்ள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. எனவே நேபாளத்துக்கு செல்ல வேண்டாம் என்று தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் விமானப் பயணத்தை மேற்கொள்ளும் படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.



ஈராக்கின் பாக்தாத்தில் நீர்ப் பற்றாக்குறையை எதிர்த்து மாநகர சபைக்கட்டடத்திற்கு வெளியே ஈராக்கியர்கள் வெற்று நீர்ப் போத்தல்கள், பதாதைகளைத்தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

## சிறுவர்களுடன் பாலியல் உறவு பாதிரியாருக்கு எட்டு ஆண்டு சிறை

(பரிஸ்)

பிரான்ஸ் கத்தோலிக்க மதகுரு பிரான் கோயிஸ் லெபோர்ட்டுக்கு சிறுவர்களுடன் பாலியல் உறவு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் எட்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர் சிறுவர்,சிறுமிகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை எதிர்த்து பெரிய இயக்கம் நடத்தியவர் எனக் கூறப்படுகிறது.

1980 இல் இருந்து 90 ஆம் ஆண்டு வரை பாதிரியார் மேற்கு ஆபிரிக்காவில் மனித நேய உறவுகளை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்தப் போர்வையில் பாதிரியார் சிறுவர்களிடம் பாலியல் உறவு வைத்திருந்ததாக செனகல் நாட்டு சிறுவர்களிடம் இருந்து பல புகார்கள் வந்தன. இதையொட்டி பொலிசார் அவரது வீட்டை சோதனை போட்டார்கள். அங்கு பாலியல் உறவு பற்றிய பல பத்திரிகைகள் இருந்தன. அவைகளைப் பொலிசார் பறி முதல் செய்தார்கள். பாதிரியார் பிரான் கோயிஸ் லெபோர்ட் மீது பொலிஸ் வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கு விசாரணை நடந்த போது அப்துல் காதர் என்பவர் வீடியோ ஆதாரங்களுடன் பாதிரியாருக்கு எதிராக சாட்சி கூறினார். சிறுவர்களைப் பாலியல் உறவுக்கு அழைத்து வந்தால் பணம் தருவதாகவும் பிரான்ஸ் நாட்டுக்கு சுற்றுலா அழைத்துச் செல்வதாகவும் அப்துல் காதர் நிதிமன்றில் கூறினார். இந்த வழக்கில் பாதிரியார் பிரான் கோவில் லெபோர்ட்டுக்கு நீதிமன்றில் எட்டாண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

## தீவிரவாத கும்பல் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக சன்னி பிரிவினர் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். ஷியா முஸ்லிம்களின் மசூதிகளையும் சன்னி பிரிவினரின் லஸ்கர் இ-ஜாங்கவி என்ற தீவிரவாத இயக்கத்தினர் குண்டு வைத்து தகர்த்து வருகிறார்கள்.

கடந்த மாதம் இஸ்லாமபாத் அருகே இந்தத் தீவிரவாதிகள் ஒரு மசூதியை குண்டு வைத்து தகர்த்ததில் அங்கு தொழுகை நடத்திய 20 பேர் பலியானார்கள். இதே போல் பாரி மசூதியிலும் இவர்கள் குண்டு வைத்து ஏராளமானவர்களைக் கொன்றனர்.

இந்தத் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தளபதி உட்பட நான்கு பேரை பாகிஸ்தான் பொலிசார் இப்போது கைது செய்துள்ளனர்.

இந்த நான்கு பேரும் தடை செய்யப்பட்ட லஸ்கர் இ-ஜாங்கவி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். கிழக்கு பாகிஸ்தானில் ஒரு மசூதி மீது கார்க்குண்டு மூலம் தாக்குதல் நடத்தச் சென்ற போது பொலிசார் அவர்களை மடக்கிப் பிடித்தனர். அவர்களிடமிருந்து சக்தி வாய்ந்த வெடி குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

ஏற்கனவே இந்த இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாவது உலகப் போரில் பங்கேற்ற அவுஸ்திரேலிய இராணுவ வீரர் மரணம்

(சிட்னி)

முதலாவது உலகப்போரில் பங்கேற்ற அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இராணுவத்தை பீற்றர் காசர்லி தனது 107 வயதில் மரணமானார்.



இத்தாலி தலைநகர் ரோமிலுள்ள மிருகக்காட்சி சாலை ஒன்றில் கோடை வெப்பத்தைத் தணிக்க தாயை அழைக்கிறது பிள்ளை.

முதலாம் உலகப்போரில்பீற்றர் காசர்லி தீவிரமாக பங்கு கொண்டவர். உலகப் போரில் 60 ஆயிரம் அவுஸ்திரேலிய வீரர்களில் 45 ஆயிரம் வீரர்கள் பலியாகினர். உயிர் தப்பியவர்களில் பீற்றர் காசர்லியும் ஒருவர் இதுநாள் வரை உயிரோடு இருந்த முதலாம் உலகப்போர் வீரரும் இவர்தான். பீற்றர் காசர்லி இப்போது தனது 107ஆவது வயதில் மரணம் அடைந்தார். கடந்த சில நாட்களாக உடல் நலம் இல்லாமல் வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார். அவரது மறைவையொட்டி இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய பிரதமர் ஜான் ஹோவர்ட் இதில் கலந்து கொண்டு பீற்றர் காசர்லிக்கு அஞ்சலி செலுத்தினார்.



மேற்குக் கரை நகரமான நப்லஸ்சில் இஸ்லாமிய ஜிகாத் ஒன்று கூடலின் போது இஸ்ரேலிய இராணுவக் கோபுரத்தை நோக்கி ஒரு முகமூடி அணிந்த பலஸ்தீனப் போராளி தனது துப்பாக்கி மூலம் குறி வைக்கின்றார்.

# கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் தமிழீழ காவல்துறையினர் தீவிரம்

## -220 லீற்றர் கோடா கைப்பற்றி அழிப்பு-இருவர் கைது

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ காவல்துறையினரால் வன்னிப் பெருநிலப்பரப்பில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை பரவலாக தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது.**

கசிப்பு உற்பத்தி நிலையங்களை கண்டுபிடித்து உற்பத்தி நிலையங்கள் அழிக்கப்பட்டு வருவதுடன் உற்பத்தியில் ஈடுபடுவோர் கைது செய்யப்பெற்று தமிழீழ நீதிமன்றுகளில் முற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்தவகையில் கிளிநொச்சி அக்கராயன் பிரதேச காவல் துறையினரால் கடந்த வியாழக் கிழமையன்று கோணாவில் பகுதியில் கசிப்பு குதம் ஒன்று முற்றுகையிடப்பட்டு கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 220 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதுடன் அவைகள் அவ் விடத்தில் வைத்து அழிக்கப்பட்டன. அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் அழிக்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பெற்று விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழீழகாவல் துறையினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் பொதுமக்களின் உதவியுடன் கசிப்புஒழிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர். (சோ)



கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் மாவீரர் பெற்றோர் மாவீரர் திருவுருவப்படங்களிற்கு மலர்மாலைகள் அணிவிப்பதையும் இந்நிகழ்வில் இடம்பெற்ற சிறுவர்களின் கலைநிகழ்வினையும் படங்களில் காணலாம். (படம் சோதி)

# தமிழீழ கல்விக்கழகத்தால் புத்தகங்கள் அன்பளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு தமிழீழ கல்விக்கழகத்தால் அண்மையில் நாற்பது ஆயிரம் ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. கடந்த கால தாக்கங்களால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் நோக்குடன் மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக மாணவர் நலன்கருதி வினாவிடைப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், ஐந்தாம் ஆண்டு மாணவருக்குரிய விசேட புலமைப் பரிசில் வழிகாட்டிப் புத்தகங்கள் தொழில்நுட்ப, அழகியல் பாடப்புத்தகங்கள் உட்பட பலவகையான மாணவர் பயன்பெறக்கூடிய புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் அதிக பயன் பெறுவர்.

# அக்கராயனில் கிராமரீதியாக அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் பிரதேசத்தில் கிராம ரீதியாக அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்,மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை இனங்காணும் பணி என்பன தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேற்படி நிகழ்வுகள் கிராம ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 18 ஆம் திகதி விநாயகர்புரம் கிராம மத்திலும், 19 ஆம் திகதி மணியங்குளம் கிராம மத்திலும்,, 23 ஆம்திகதி கரி தாஸ், கெங்காதரன் குடியிருப்பு கிராம மத்திலும்,25ஆம்திகதி வன் னேரிக் குளத்திலும் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் மக்கள் எதிர் கொள்கின்ற முக்கியபிரச் சினைகள் பற்றியும், அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆராயப் பட்டதுடன் நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலை பற்றியும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக் கூறப் பட்டதாகவும் தெரிவித்த அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் இ.சிறி இந் நடவடிக்கை கிராம ரீதியாக தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

இந்த தொடர் நிகழ்வுகளில் தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அ.பார்த்தீபன், கல்லூரி விரிவுரையாளர் சி.புலிமறவன், கல்விக்கழகத்தைச்சேர்ந்த அறிவன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)

### அடிக்கல் நாட்டுவிழா

பெரிய புல்லுமலை பல் தேவைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுநிகழ்வுகடந்தசெவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் தமிழர்புனர் வாழ்வுக் கழக திட்ட இணைப்பாளர் மா.சதா சிவம், மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் தயாமோகன், ஏறாவூர்ப் பற்று உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ச.பிரணவசோதி, ஏறாவூர் பற்று பிரதேச சபைச் செயலாளர் திருமதி சி.யே. அருட்பிரகாசம், புல்லுமலைக் கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.பாலகிருஷ்ணன், திட்டப் பொறியியலாளர் ரி.றஞ்சித்குமார் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# கரும்புலிகள்தினத்தை முன்னிட்டு

## -சிரமதானப்பணிகள்

(அலுவலகசெய்தியாளர்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு கிளி.அக்கராயன் வர்த்தகர்கள் இணைந்து மேற்கொண்ட சிரமதானப்பணிமூலம் அக்கராயன் பொதுச்சந்தை வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த 50 இற்கும் அதிகமான வர்த்தகர்கள் இணைந்திருந்தனர். காலை எட்டு மணிக்கு ஆரம்பமான சிரமதானப் பணி நண்பகல் வரை நடைபெற்றது. இதன் மூலம் பற்றைகள், குப்பைகூழங்கள் நிறைந்திருந்த பொதுச்சந்தை வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சிரமதானப்பணி அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. (லோ)

### விதிப்போக்குவரத்து விதிமுறைகள்

#### -கருத்தூட்டல் நிகழ்வு

அண்மைய நாட்களாக தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் தமிழீழ வைப்பக நடுவப் பணியகம் மற்றும் கிளைகளில் பணி யாற்றும் பணியாளருக்கான வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கருத்தூட்டல் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர். இக்கருத் தூட்டல் நிகழ்வில் கிளிநொச்சி, மல்லாவி, பூநகரி, முழங்காவில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, புளியங்குளம், விசுவமடு ஆகிய கிளைகளில் பணிபுரியும் பணியாளர்களும், தமிழீழவைப்பக நடுவப்பணியகத்தில் கடமைபுரியும் பணியாளர்களும் என 200 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இக் கருத்தூட்டல் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். இக்கருத் தூட்டல் நிகழ்வில் பாதசாரிகள், துவிச்சக்கரவண்டி ஓட்டிகள், சாரதிகள், வீதியைப் பாவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் தொடர்பாக தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கருத்துக்களை வழங்கியுள்ளார்.

# பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள் பிரமந்தனாறு கிராமமக்களிடம் கையளிப்பு

(கண்டாவளை)

நியாப் நிறுவனத்தால் 2003 ஆம் ஆண்டு பிரமந்தனாறு கிராமத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள் பிரமந்தனாறு கிராம மக்களிடம் கையளிக்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை பொதுநோக்கு மண்டபத்தில் மாதர் சங்கத் தலைவி வி.புனிதவதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கலவிளக்கை நியாப் திட்டப்பிரதிப்பணிப்பாளர் வினோதராஜ், கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பற்பநாதன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழதேசியக் கொடியை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு தலைவியும் தேசிய எழுச்சி பேரவை மகளிர் உறுப்பினருமான திருமதி. தேவாம்பிகை காசிநாதன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பொதுநோக்கு மண்டபத்தை நியாப்பிரதித் திட்டப் பணிப்பாளர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வரவேற்புரையை கி.அ.சங்கத்தலைவர் சிதம்பரநடராசா [illegible]னார். கருத்துரைகளை கிளி. [illegible]பாசன பொறியியலாளர் கந்தசாமி, நியாப் திட்டப்பிரதிப்பணிப்பாளர், த.பு.க.சமூக உணர்வூட்டல் பகுதியைச் சேர்ந்த சிவபாலன், கண்டாவளைப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து புனரமைப்புச் செய்யப்பட்ட பிரமந்தனாறு குளம்,பிரதானவீதி (4.6 கிலோமீற்றர்) பொதுமண்டபம், இரு பொதுக்குடிநீர் கிணறுகள் ஆகியவற்றின் பராமரிப்பு உரிம ஆவணங்கள் கிராம அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டன. (14)

# கால்நடைகளிற்கு தடுப்பூசிஏற்றல் -விபரம்-

கால்நடைகளிற்கான தொண்டைஅடைப்பான் நோய்க்கு தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை விசுவமடுப்பகுதியிலும் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை உடையார் கட்டுப்பகுதியிலும்,ஆறாம், ஏழாம்திகதிகளில் சுதந்திர புரத்திலும்,எட்டாம் திகதி தொடக்கம் 12ஆம்திகதிவரை வள்ளிபுனம்,தேவிபுரம்,கைவேலி ஆகிய இடங்களிலும்,13ஆம்திகதி தொடக்கம் 15ஆம்திகதி வரை மன்னாங் கண்டல் பகுதியிலும் ,16-18ஆம் திகதிவரை கள்ளியடியிலும் 19-20 ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதிகளிலும், 22,23ஆம்திகதி வரைஆனந்தபுரம் கோம்பாவில் பகுதிகளிலும், 25-26ஆம்திகதி வரை இரணைப்பாலையிலும், 27ஆம் திகதி சிவநகர் வேணாவில்பகுதியிலும் நடைபெறவுள்ளன.எனவே புதுக் குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் தங்கள் கால் நடைகளுக்கான தடுப்பூசிகளை போட்டு ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு முல்லைத்தீவு கால்நடை அலுவலகம் கேட்டுள்ளது. (05)

# அம்பியூலன்ஸ் வண்டிகள், சாரதிகளுக்கு முல்லை மாவட்டத்தில் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பதினைந்து அம்பியூலன்ஸ் வண்டிகள் தேவையாக உள்ள போதிலும் தற்போது ஆறு வண்டிகளே சேவையில் உள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு பிரதிமாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கான வாகனங்களுக்கு தேவையான ஓட்டுநர்கள் இல்லையெனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிரதிமாகாண சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறுகையில், அடிப்படை சுகாதார வசதிகளை கிராம மட்டத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டு வருவதாகவும் 2003ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்தினால் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும் 2005 ஆம் ஆண்டு வேள் விசன் நிறுவனம் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தருவதாக தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை யுனிசெப் நிறுவனம் 2004ஆம் ஆண்டில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத்தருவதாக கூறிய போதிலும் இதுவரை அதற்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லையெனவும் அவர் மேலும்கூறியுள்ளார். (20)

### ''உறங்கும் அபாயம்'' திரையிடல் நிகழ்வு

''உறங்கும் அபாயம்'' தமிழாக்கப்பட திரையிடல் நிகழ்வு நேற்று நடை பெற்றது. புலிகளின் குரல் நிறுவனத் தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக மௌன அஞ்சலியினை தொடர்ந்து தமிழாக்கப்பட அறிமுக உரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெருமளவில் கலையார்வலர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (சோ)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நிரந்தரவீடுகள் -முல்லை அரச அதிபர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். முதற்கட்டமாக சிலாவத்தைத் தீர்த்தக்கரையில் 100 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை மேற்கொள்ளவுள்ளதாகவும் இக் கட்டடங்களின் அனைத்து வேலைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார். (20)

### -திறப்புவிழா நிகழ்வு-

நீர்ப்திட்டஉதவியின் கீழ் முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்குத்திறந்து வைக்கப் படவுள்ளதாக முல்லைமாவட்ட சுகாதாரவைத்தியஅதிகாரி து.வி. ஜெயக்குலராஜா தெரிவித்தார். (20)

# வள்ளங்கள் மூலமாக மீன்பிடிக்க மீனவ சங்கங்களின் சமாசம் தீர்மானம்

— *அரசு உதவ மறுப்பதால் மாற்றம்*

*(வடமராட்சி)*

***சுனாமிகடல்அனர்த்தத்தினையடுத்து வீழ்ச்சிகண்டிருக்கும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்தும் முகமாக வள்ளங்கள் மூலமான மீன்பிடியை மீள ஆரம்பிப்பதென தற்போது முடிவுசெய்யப்பட்டுள்ளது. வடமராட்சி மீனவ சங்கங்களின் சமாசம் இவ்அறிவிப்பினை விடுத்துள்ளது.***

சுனாமி கடல் அனர்த்தத்தினால் மீன்பிடிக்கலங்கள் மற்றும் வலைகள் உள்ளிட்ட உப கரணங்களை இழந்த மீனவ குடும்பங்களிற்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்வரை வள்ளங்கள் மற்றும் படகுகள் மூலமான மீன்பிடியை மேற்கொள்வ தில்லையென முன்னர் தீர்மானிக் கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் கட்டுமரங்கள் மூலமான மீன்பிடி மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும் அரசினது உதவிகள் ஏதும் மீன்பிடியை ஆரம்பிப்பது தொடர்பினில் கிட்டியிருக்காத நிலையில் தொண்டரமைப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட ஒரு பகுதி மீன்பிடி வள்ளங்கள் மற்றும் வலைகளைக்கொண்டு மீண்டும் மீன்பிடித்தொழிலை ஆரம்பிப்பதென தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் பிரகாரம் முதற் கட்டமாக பருத்தித்துறை முனைப் பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் வள்ளங்கள் மூலமான மீன்பிடியை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறானதோர் நடவடிக்கையின் மூலமே சுனாமி கடல் அனர்த்தத்தை அடுத்து பாதிப் பிற்குள்ளான மீன்பிடித் தொழிலை மேம்படுத்த முடியுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் மீனவ சமாசம் மேலும் அறிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் வடமராட் சிக் கடற்பரப்பில் அண்மையில் ஆயிரத்திற்கும் அதிகமாக மீன்பிடிக் கலங்கள் கடந்த காலங்களில் தொழி லில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் மரணம்

(திருமலை)

கடந்த மூன்றாம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது சீமெந்து தொழிற்சாலைக்கு குண்டுவீச முனைந்ததாகக்கூறி சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இரு இளைஞர்களில் ஒருவரான ரவி என்பவர் நேற்று முன்தினம் கண்டி போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

கடுமையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும் உடும்பு பிடிக்க காட்டுக்குள் சென்ற போது விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிதிவெடியில் சிக்கி இரு மாடுகள் காயம்

(அலுவலக செய்தியாளர்)

மிதிவெடி வெடித்ததில் பிணைத்தபடி சென்ற இரண்டு பசு மாடுகள் காயமடைந்தன. இத்தாவில் வேம்பொடு கேணி அ.த.க.பாடசாலை அருகில் த.சுப்பிரமணியம் என்பவரது காணியில் இராணுவ காவலரண் மண் அணைக்கு உள்ளே இருந்த மிதிவெடியே வெடித்துள்ளது. மண் அணைக்கு வெளியே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டபோதும் உட்பகுதி இதுவரை கண்ணிவெடிகள் அகற்றப்படாதுள்ளது.இது குறித்து பாடசாலை மாணவர்களுக்கும் அண்டிய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது. (சு)

# கோரக்கன்கட்டு கிராமத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் கோரக்கன்கட்டு கிராமத்தில் சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஐந்து மணிக்கு கோரக்கன்கட்டு தேசிய எழுச்சிப் பேரவை செயலர் செல்வராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணண், தூயவன்அரசறிவியற்கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் கண்டாவளை கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் வின்சன், கிளி. மாவட்ட விளையாட்டுதுறை பொறுப்பாளர் ராஜா, பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலர் நாகேந்திரம் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஒளிநாடாபடக் காட்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கூட்டுறவு முகாமைத்துவ ஆலோசனை சபையால் சிறப்பு முகாமைத்துவ கற்கைநெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையினரால் சிறப்பு முகாமைத்துவ கற்கை நெறி வைபவரீதியாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் திறனை மேம்படுத்துவதையும் முகாமையாளர்களை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டுள்ளது இதன் மூலம் உலக மயமாக்கலுக்கு முகம்கொடுத்து புதிய தொழில் முயற்சிகளை திட்ட மிட்டு நெறிப்படுத்தி கூட்டுறவு இயக்கத்தை மக்கள் மயப்படுத்து வதே நோக்காக உள்ளது.

மேற்படி கற்கைநெறி தொடக்க நிகழ்வானது நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு நுகர்ச்சி சமாச மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுமுகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச்சபை தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசி உரையினை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீல ஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்/ அருட்திரு ஜெயக்குமார் அடிகள் மௌலவிசபைதீன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் கூட்டுறவு நிறுவனப் பிரதிநிதிகளும் நிகழ்த்தினர் தொடர்ந்து விரிவுரையினை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி ஆரம்பித்துவைத்தார். (சு)

# மகளிர் இல்லத்துக்கான அடிக்கல் நாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில் பராமரிக்கப்பட்டு வரும் அரசடித்தீவு சக்தி மகளிர் இல்லத்தின் இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல்லத் தலைவர் எஸ்.புஸ்பலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பலதரப்பட்ட சிறார்களின் நலன், கல்வி, ஆற்றுப்படுத்தல் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இயங்கிவந்த இச்சிறுவர் இல்லத்திற்கு கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமித் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள பெண் சிறுமியர்களையும் இணைத்துள்ளது சிறுவர்களைப் பராமரிப்பதில் இடப் பற்றாக்குறை நிலவியதால் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையின் அனுசரணையில் இக்கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக சுவிஸ் கிளை இணைப்பாளர் எஸ்.கோபால் அவர்கள் கலந்து கொண்டார். அடிக்கல் நாட்டுவிழாவினை முன்னிட்டு இவர் கருத்துரைக் கையில்; சிறுவர்களின் கல்வி மேம்படுத்தப்பட வேண்டும், அதன் மூலம் எதிர்காலத்தில் சமூகப் பொருளாதாரரீதியில் முழுமைய டைந்திருக்கவேண்டும், எனவும் கூறி சிறுவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு மென்மேலும் பல நடவடிக்கைளைச் செய்யவுள்ள தாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் இணையத் தலைவர் கமலநாதன் உரையாற்று கையில்; உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனைப்பேணுவதில் சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமானது எனவும், அப்பணியினைச் செய்வதில் சிறுவர் இல்லத்தின் பங்கு பெரிதும் காணப்படுவதாகவும், ஒவ்வொரு சிறுவர்களும் சமூகத்தில் நற்பிரஜை யாக வாழவேண்டியவர்கள் என்றும் தனதுரையில் குறிப்பிட்டார். இந்நிகழ் வில் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் த.சோமசுந்தரம் மற்றும் கிராமத் தலைவர்கள், ஆலய நிர்வாகத் தலைவர், நலன் விரும்பிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# பாரஊர்திச்சாரதி கொலை சந்தேக நபர் ஒருவர் கைது!

(வவுனியா)

காட்டில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்ட பாரஊர்திச் சாரதி ஒருவரின் கொலைதொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். செட்டிகுளம் பொலிஸ் பிரிவில் முகத்தான்குளம் காட்டில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட பாரஊர்திச் சாரதி ஒருவரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். புத்தளம் பகுதியி லிருந்து மன்னாருக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட பாரஊர்திச் சாரதியின் சடலம் கடந்த திங்கட் கிழமை பொலிசாரால் மீட்கப்பட்டிருந்தது. பாரஊர்திவாடகைக்கு அமர்த்திய தாகக் கூறப்படும் நபர் தலைமறை வான நிலையில், கேகாலையில் இவர் கைது செய்யப்பட்டு தம்மிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிசார் கூறினர். இக்கொலை யுடன் சந்தேக நபருக்கு தொடர்பு இருக்கின்றதா? என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# வாகரையில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு ஜூலை-5 இற்குள் தற்காலிக வீடுகள்

*-உதவி அமைப்புகளுடனான சந்திப்பில் இணக்கம்*

வாகரைப் பிரதேசத்தில் சுனாமி யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிதுரிதப்படுத்தப்பட்டுள்ளது. திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், எஸ்.ஓ.எஸ். நிறுவனம், ஐ.ஓ.எம். நிறுவனம், கே.பி.என்.டி.யூ. நிறுவனம், ஒக்ஸ்பாம், ஆஸ்ரமம், சர்வோதயம், சேவாலங்கா, ஜீ.ரி.இசட் நிறுவனம் போன்றவற்றின் பிரதிநிதிகள் இதுதொடர்பாக இடம்பெற்ற கூட்டத் தில் கலந்துகொண்டனர். இக்கூட்டத் தில் வாகரைப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கிராமங்களின் மக்கள் அனைவருக் குமான தற்காலிக வீடுகள் முழுவதும் எதிர்வரும் ஐந்தாம் திகதிக் கிடையில் மைத்துக் கொடுக்கும் நிலையில் கொண்டு வரவேண்டும் எனவும், தற்போது கூடார வாழ்க்கையில் இருந்து வரும் மக்களை விடுவிக்க வேண்டும் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதனை அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டுள்ள தாக வாகரைப் பிரதேச உதவிச் செயலாளர் ராகுலநாயகிதெரிவித்தார்.

# மட்டக்களப்பில் ஐந்து பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக உள்ளன!

~கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை ஐந்து பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக மக்கள் தங்கியுள்ளதால் அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். கடல்கோள் அனர்த்தம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் பூர்த்தியடையும் நிலையில் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 37 நலன்புரி நிலையங்களில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றில்ஐந்து பாடசாலைகளும் அடங்குகின்றன. இதனால் அப்பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகள் இன்றிக் காணப்படு வதாக பெற்றோர் விசனம் தெரிவிக் கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்கோள் அனர்த்தத்தினால் 200 மீற்றருக்கு வெளியே 17309 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 200 மீற்றருக்கு உள்ளே 4227 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன.

தற்போது இவர்கள் 7118 தற் காலிக வீடுகளில் வசித்து வருகின் றனர். ஆனால், அவர்களுக்கு மேலும் 10859 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

# மிகவறிய குடும்பங்களிற்கு உடைகள் அன்பளிப்பு


மன்னார் மாவட்டத்தில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களிற்கு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தினால் 500ரூபா முதல் 1000ரூபா வரையிலான உடைகள் வழங்கப்பட்டுள்ளன.


கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தில் உதவிப்பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் செஞ்சிலுவைச்சங்கத்தைச்சேர்ந்த செபஸ்தியான்குரூஸ் அவர்களும் கலந்து கொண்டு மக்களிற்கான உடைகளை வழங்கியுள்ளார். (18)

# ஜே.ஆரை ஒத்த ரணிலின் தந்திரம் வெற்றியைத் தேடித்தருமா?

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
தமிழில்-வடிவேல்







1970-77 காலப்பகுதியில் சிறிமாவோவின் கூட்டு முன்னணி அரசிலிருந்து என்.எம் பெரேரா சிறிமாவோ பண்டாரநாயக்கவிடமும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆரிடமும் அறிவித்த பின்னரே விலகினார். இந்த விலகலை ஏற்றுக்கொண்டு ஜே.ஆர். மௌனமாக இருந்தார். அவர் அலரி மாளிகையில் இது பற்றிய சந்திப்பு நடந்தமையையும் இரகசியமாகவே வைத்திருந்தார்.

அதே போன்றே ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகாவின் கூட்டணியிலிருந்து ஜே.வி.பி விலகியது தொடர்பாக சனாதிபதி மாளிகைக்குச் சென்று சனாதிபதி சந்திரிகாவை இரகசியமாகச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு எவ்வளவு தூரம் இரகசியமாகும் என்றால் சந்திரிகாவுக்கு மிக நெருக்கமானவரான கதிர்காமர் கூட அருகில் இருக்கவில்லை என்பதாகும். அந்தச் சந்திப்புக்கு அவர் அழைக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பின்மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சந்திரிகா மீண்டும் இத்துப்போன கயிற்றை கொடுத்திருக்கிறாரோ என மக்கள் கருதியிருப்பர். காரணம் 2003 ஆம் ஆண்டு ரணிலின் மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்துவிட்டு அவருக்கும் தெரியாமல் அரசாங்கத்தை கலைத்துவிட்டமையாகும். இதனால் ஆத்திரமுற்ற கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் தலைவர் ஆட்சியைத்தாரைவார்த்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

அத்துடன் இது ஜே.ஆர். செய்த தந்திரம் போன்று இருக்கலாம் என்றும் நினைத்தனர்.

ரணிலைப் பொறுத்தவரை அவர் கட்சியின் தலைவராகப் பதவியேற்று 11 வருடங்களாகின்றன. எனினும் ரணில் எப்படிப்பட்டவர் என்பதை யாரும் புரிந்துகொள்ளவில்லை.

அன்று ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்கியிருந்தால் சந்திரிகாவின் தலைமையில் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய சிறிலங்கா சுதந்திரக்கட்சி அனைத்தும் இணைந்து போராட்டம் நடத்தியிருந்தால் ரணிலின் அரசாங்கத்துக்கு என்ன நடந்திருக்கும்? அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான சுனாமி பேரலை அனர்த்தம் ஏற்பட்டு அதனால் மேற்படி கட்சிகள் இணைந்து தெற்கில் நிவாரணப்பணிகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும்? ரணில் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு வீட்டுக்குச் சென்றிருக்கலாம். அத்துடன் 2005 ஆம் ஆண்டு சனாதிபதி வேட்பாளராக கூட அவர் நிற்க முடியாத நிலை தோன்றியிருக்கும். ஆனால் ரணில் இதையெல்லாம் நன்கு உணர்ந்தே வைத்திருக்கின்றார். சுனாமி அனத்தம் பற்றியோ நாட்டின் விலைவாசி பற்றியோ அறிந்திராவிட்டாலும் நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதியின் கீழ் ஆட்சி நடத்த முடியாது என்பதை அவர் அறிந்தே வைத்திருந்தார். அவர் அன்று புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை அதிகாரத்தை வழங்குவதற்கே பயந்தார். இன்று இடைக்கால நிர்வாகசபையை வழங்கலாம் என்று கூறும் கதிர்காமரும் சந்திரிகாவும் அன்று புலிகளிடம் இடைக்கால நிர்வாக அதிகாரத்தை வழங்குதல் பெரும் பயங்கரமானது என்றனர். இறுதித்தீர்வுடன் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேச்சு நடத்தலாம் எனக் கூறும் ஜே.வி.பியினரும் அன்று இதனை தனித் தமிழீழம் என்று கொக்கரித்தனர். ரணில் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேச்சு நடத்தியிருந்தால் 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்ததைவிட பெரும் எதிர்ப்பை அவர்கள் காட்டியிருப்பர்.

அடுத்ததாக ரணில் இடைக்கால நிர்வாகசபையை மறுத்திருந்தால் விடுதலைப் புலிகள் நேரடியாக யுத்தத்தில் இறங்க இடமிருந்தது.

இந்த இரண்டு விடயங்களில் எது நடைபெற்றிருந்தாலும் ரணில் மூக்குடைபட்டிருப்பார். ஆனால் இவையிரண்டுமே நடைபெறாமல் சந்திரிகாவின் (சுந்திரிகா-ஜே.வி.பி) கூட்டணி அரசு பதவிக்கு வந்துவிட்டது. இந்தக் கூட்டணி பதவிக்கு வரும் போதும் ஒருவகையில் நன்மை என்றே அன்று ரணில் கணிப்பிட்டார். காரணம் இருவரும் ஒன்றுசேர்ந்து அழிவைச் சந்திக்கும் போது தான், தான் நேரடியாக சனாதிபதி வேட்பாளராக வரலாம் என்று நினைத்தமையாகும். எனவே ரணில் ஓரடி பின்வாங்கியது இரண்டடி முன்னேறுவதற்காகும். அவரின் கணிப்புச் சரியாக அமைந்தது எவ்வாறெனில் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றைக் கலைத்தமை தனது முட்டாள் தனமான வேலையென சந்திரிகா தற்போது கருதுவதும், இதனைச் செய்தது தமக்கோ கட்சிக்கோ எவ்வித நன்மையும் கிடைக்கவில்லையே என அவர் ஒப்புக் கொண்டு வருந்துவதுமாகும். இதனை அறியாமலேயே அன்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

இப்போது அவர்களுக்கு உண்மை புரிந்திருக்கின்றது. இத்துப் போன கயிறு ரணிலிடம் அல்ல சந்திரிகாவிடமே கிடைத்திருப்பதாக அவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

இப்போது விலைவாசி உயர்வுகள் சுனாமிப் பேரலை அனர்த்த நடவடிக்கைகள், பொதுக்கட்டமைப்பை வழங்குதல் போன்ற விடயங்களில் சந்திரிகா சிக்கித்தவிக்கும் நிலையில் ஐ.தே.கட்சியினர் அவ்வாறே எண்ணுகின்றனர். அத்துடன் சந்திரிகா தற்போது ரணிலின் கைகளில் தங்கியிருக்கிறார் என்றும் கருதுகின்றனர். ஆகவே இப்போது சந்திரிகாவைச் சந்தித்து ரணில் என்ன மாதிரியான கயிற்றைக் கொடுத்திருக்கிறாரோ எனக் கட்சி ஆதரவாளர்கள் சிந்திக்கின்றனர்.

எவ்வாறாயினும் அன்று ஜே.ஆர். மௌனமாக இருந்தது போன்றே ரணிலும் மௌனமாக இருக்கிறார். எனினும் தற்போதைய சிறிலங்காவின் அரசியல் சூழ்நிலைக்கு இந்த மௌனம் பொருத்தமாயிராது. உண்மையில் ஜே.ஆரின் அமைதி அனைவரினதும் பாராட்டைப் பெற்றிருந்தபோதும் அவர் 1988 ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வுபெற்றது பெரும் சாதனைக்குப் பின்னராகும்.

அதாவது 1978 ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை ஏற்படுத்தி பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திவிட்டு அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றார். அதே போல் அவரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்கவும் அமைதியாக இருந்து பல சாதனைகளை நிலை நாட்டுவாரா? என்பது தற்போது நாட்டு மக்களினதும், கட்சி ஆதரவாளர்களினதும் எதிர்பார்ப்பாகும். சிறிலங்காவின் அரசியலைப் பொறுத்தளவில் ஜூன் மாதம் என்பது ஒருவிசேட மாதமாகக் கருதப்படுகிறது. காரணம் 2001 ஆண்டு இதே மாதம் சந்திரிகாவின் அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகியது. இப்போதும் ஜே.வி.பி தனது ஆதரவை விலக்கிக்கொண்டு விட்டது. இதனால் சிறுபான்மைப் பலத்துடன் எவ்வாறு ஆட்சி நடத்தலாம் என்று சந்திரிகா சிந்தித்தவண்ணம் இருக்கிறார். எனவே சிறுபான்மைப் பலத்தோடு ஆட்சி நடத்த முடியாதெனக்கருதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைப்பாரா? மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்று வருமா? அதன் மூலம் சந்திரிகாவின் அரசியல் வாழ்வு அஸ்தமிக்குமா? ரணிலின் அமைதிக்கும் மௌனத்திற்கும் பலன் கிட்டுமா? இவற்றுக்கு யாராலும் இப்போது விடைகூற முடியாது.



# மண்விடுதலைக்காக எதைச் செய்யவேண்டுமோ தமிழ்மக்கள் அதைச் செய்தே ஆக வேண்டும்

## —அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா

(அலுவலக செய்தியாளர்)

பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும் திருப்திப்படுத்திவிடமுடியும் என சந்திரிகா எண்ணுகிறார். அந்த வகையில் பொதுக்கட்டமைப்பை ஒரு பொறியாகப் பயன்படுத்துகிறார். இந்தப் பொறியினுள்ளே தமிழீழ மக்களையும், விடுதலைப் புலிகளையும் விழுத்திவிடலாம் என்று நம்புகிறார். ஆனால் தமிழீழ மக்கள் இந்தப் பொறிக்குள்ளே அகப்பட்டு நிற்கும் மக்களாக வரலாற்றில் இனி ஒரு போதும் உருவாகமாட்டார்கள் என்பதை இனிவரும் வரலாற்று நடவடிக்கைகள் சந்திரிகாவிற்கு உணர்த்தும் என்பது திண்ணம்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு மற்றும் வீரமுரசு நிகழ்வில் அரசறிவியல் கல்லூரியைச்சேர்ந்த அரசண்ணா அவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் நடத்துகின்ற ஒவ்வொரு போராட்டமும் அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன, எங்களுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன.

இந்த ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பானது ஒருவருட ஆயுளைக் கொண்டது. இந்த ஒப்பந்தம் கூட சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எங்கள் வரலாற்றினை திருப்பிப்பார்க்கும் போது காலத்திற்குக்காலம் எழுதப்பட்ட ஒப்பந்தங்களைச் சிங்களப்பேரினவாதிகளின் எதிர்ப்பின் காரணமாக கிழித்தெறியப்பட்ட வரலாற்றினையே கண்டிருக்கிறோம். இன்றும் அந்த பேரினவாதிகளின் எதிர்பார்ப்பின் மத்தியிலேயே இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சிங்களப் பேரினவாத வெறியர்களின் அடக்குமுறைக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் மத்தியிலேயே தமிழ்மக்கள் தங்கள் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான போராட்டத்தினை நடத்தி வெற்றிகொண்டுள்ளதனைக் காண்கின்றோம்.

தமிழீழமக்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கக் கூடாதென்று இந்த சுனாமி அனர்த்த உதவியைக் கூட தமிழ்மக்களுக்குச் செய்யக் கூடாதென்று சொல்லி ஒரு மனித அநாகரிகமான முறையில், தங்களுடைய போக்கை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற சிங்களக் காடையர்களுக்குப் பதிலளிக்கும் வகையிலே தமிழ் மக்கள் இன்று வேகமும், கோபமும் கொண்டிருப்பது ஒரு சரியான வரலாற்றுப் போக்கு என்றுதான் சொல்ல வேண்டும்.

எமது வருங்காலச் சந்ததியினர் விடு தலை பெற்ற தமிழீழ மண்ணில் சுதந்திரமாக, நிம்மதியாக உரிமையோடு சந்தோசமாக வாழ வேண்டும். அந்த சந்தோச வாழ்வு நீடிக்க வேண்டும். ஆக்கிரமிப்பின்றி சுபீட்சமாக வாழ வேண்டும்.

இந்த மண் விடியலுக்காக எந்த நடவடிக்கைகளை எந்தச் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டுமோ அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழ்மக்களாகிய நாங்கள் அனைவரும் மேற்கொண்டேயாக வேண்டும் என்கின்ற ஒரு தீர்மானத்திற்கு வந்தாக வேண்டும் என்றார்.

இரத்தினபுரம் தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலர் இ.சிறீபாலன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் ஈகச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து சிறுவர்களின் கலைநிகழ்வுகளும், நவம் அறிவு கூட கலைஞர்களின் இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை, கிளி.பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், போராளி ஜெகன் மற்றும் மாவட்ட பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சோ)




**16.06.2005-22.06.2005**

**16**

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மேற்கு றமாடி நகரில் தீவிரவாதிகளின் தாக்குதலில் ஒரு கடற்படை "கிம்வீ" கப்பல் சிப்பந்தி உட்பட ஐந்து ஈராக்கிய கடற்படையினர் பலி.



➡ சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து கழிவுகளை ஏற்றிக்கொண்டு பூமிக்கு வந்துகொண்டிருந்த ரஷ்யாவின் புராகிரஸ் எம்-52 சரக்கு விண்கலம் பசுபிக்கடலில் விழுந்து மூழ்கியது.

**18**

➡ அமெரிக்காவின் கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குக் கிழக்கே யுகைப்பாவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் அதிர்ந்ததுடன் மக்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு சிதறி ஓடினர். நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.3 புள்ளியாகப் பதிவானது.

➡ ஈரானில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இடம் பெற்றது.

➡ கௌதமாலாவில் கடும் மழையால் ஏற்பட்ட மண் சரிவிற்குள் சிக்கி 23 பேர் பலி; 45 பேர் காயம்.

➡ ஆகாஷ் ஏவுகணை ஒரிஷா மாநிலம் சாந்திப்பூர் அருகே நடமாடும் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

➡ ஈராக்கில் அமெரிக்கத் தொடரணியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் சிறுமி உட்பட மூவர் காயம்.



➡ இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் நோர்வே நாட்டிற்கு விஜயம் செய்து அந்நாட்டு பிரதமர் கெஜல் மேக்னி, போண்டிவிக்கைச் சந்தித்துப் பேசினார்.



➡ தாய்லாந்தின் தென்பகுதியில் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் இரு சடலங்கள் மீட்பு.

➡ தென் ஆப்கானிஸ்தானில் அரசாங்க அலுவலகம் மீது தலிபான்கள் நடத்திய தாக்குதலில் ஐந்து பேர் பலி.

**19**

➡ மியன்மாரில் எதிர்க்கட்சித்தலைவி சுகியை இராணுவ சிறையில் அடைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் வோஷிங்டன் நகரிலுள்ள மியன் மார்தூதரகம் முன்பு அவரது ஆதரவாளர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

➡ ஜப்பானின் கிழக்குக் கடற்கரையில் நிலநடுக்கம் எற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.1 புள்ளியாகப் பதிவானது.

➡ பாக்தாத்தின் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமான பச்சை வலயத்திற்கு அருகே உள்ள உணவகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 23 பேர் பலி.

➡ பெருவின் வடக்கிலுள்ள காட்டுப் பிரதேசத்தில் இராணுவ உலங்குவானூர்தி விழுந்து நொருங் கியதில் இருவர் பலி.

➡ கொலம்பியாவின் மேற்குப் பிர தேசத்தில் பேருந்து ஒன்று தடம் புரண் டதில் ஐந்து பேர் பலி, 11பேர் படு காயம்.



**20**

➡ இந் தியாவின் கு ஜ ரா த் மாநிலத் தின் வடோரா எனுமிடத்தில் தனியார் பேருந்து ஒன்று குடைசாய்ந்து விழுந்ததில் 19 பேர் பலி, 20 பேர் காயம்.




➡ லெபனானின் லாடா முஸைட்பி மாவட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் லெபனான் கம்யூனிஸ்ட்டு கட்சியின் முன்னாள் தலைவர் ஜோர்ஜ் ஹாலி கொல்லப்பட்டார்.

**21**

➡ இஸ்ரேலிய பலஸ்தீன பிரச்சினைகளுக்கு இராஜதந்திர ரீதியாகத் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நோக்கில் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோனும், பலஸ்தீன அதிபர் மகமூத் அப்பாசும் ஜெருசலேத்தில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

➡ மதுரையில் இந்து மக்கள் கட்சி மாநிலத்துணைத்தலைவர் காளிதாசன் மர்ம நபர்களினால் படுகொலை செய்யப்பட்டார்.



➡ மத்திய இஸ்ரேலில் பயணிகள் ரயிலொன்றும் நிலக்கரி ஏற்றிச் சென்ற ரக் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் பலி, 191 பேர் காயம்.



**22**

➡ இராணுவ தகவல் தொடர்புக்காக செயற்கைக்கோளுடன் கூடிய ரொக்கெட்டை ரஷ்யா ஏவி சிறிது நேரத்தில் சைபீரியாவில் விழுந்து வெடித்தது.

➡ தென் சீனாவில் பெருவெள்ளம் காரணமாக 24 பேர் பலி, 23 பேர் காணாமல் போயுள்ளனர்.

➡ வடகொரியாவும், தென்கொரியாவும் தமக்கிடையிலான உறவுகளை விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் பேச்சுக்களை ஆரம்பித்தன.

# ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது ஏன்?

## பா.உறுப்பினர் விமல் வீரவன்ச விளக்கம்

ஆழிப்பேரலை மீளமைப்புக்காக கைச்சாத்தாகியுள்ள பொதுக்கட்டமைப்பை தமது கட்சி ஏன் எதிர்க்கிறது என்று ஜே.வி.பி யின் பாராளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச விளக்கம் அளித்துள்ளார்.

இக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு யாருடையது? என்பது விளக்கப்படவில்லை. இது ஒரு உரிமையாளர் அல்லாத வெற்றுக் காகிதம் தான். இதில் யார் கையெழுத்திட்டார் என்பது கூட தெரியவில்லை. பாராளுமன்றத்தில் நாம் எழுப்பிய கேள்வி பொதுக் கட்டமைப்பு விவாதத்தின் போதே கைச்சாத்திடப் போகிறீர்களா என்பது தான். ஆனால் அதற்குரிய பொறுப்பான பதில் கிடைக்காததால் பாராளுமன்றத்தில் சில சம்பவங்கள் நடந்தன.

இது இரண்டாவது யுத்தநிறுத்த ஒப்பந்தம் அல்ல. இது தமிழீழத் தனியரசுக்கு சட்ட அங்கீகாரம் அளிக்க வகை செய்கிற ஒரு நடவடிக்கையே.

பொதுக்கட்டமைப்பின் 2 (எப்) சரத்தானது, யுத்த நிறுத்த ஒப்பந்தம் முழு வலுவுடன் நடைமுறைப் படுத்துவது தொடர்பாகக் கூறுகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், ஜே.வி.பி.க்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரானது இந்த சரத்து. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மாறுதல்களை மேற்கொள்ள நாங்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்தோம்.

பிரதேச குழுவில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஐந்து உறுப்பினர்களையும், சிறிலங்கா அரசு இரண்டு, முஸ்லிம் தரப்பினர் மூன்று உறுப்பினர்களையும் கொண்டிருப்பார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதியே இக்குழுவின் தலைவர். அவருக்குக் கீழ்த்துணைத்தலைவராகத் தான் அரச பிரதிநிதி இருப்பார். சுயமரியாதை உள்ள எந்த அரச பிரதிநிதியாவது இதை ஏற்பாரா?

இந்த பொதுக்கட்டமைப்பின் படி தமிழர்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகளும், முஸ்லிம்களின் பிரதிநிதி ஒருவரும் இருப்பார்கள். சிங்களவர் பிரதிநிதியாக சிறிலங்கா அரசு இருக்கும்.

சிறிலங்கா அரசானது சிங்களவர்களின் பிரதிநிதி மட்டும்தான் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கூறுவதையல்லவா எடுத்துக்காட்டுகிறது.?

சிறிலங்கா நிதி அமைச்சகத்துக்கோ, திறைசேரிக்கோ நிதி கையாளுகையில் பங்கேற்பில்லை. பன்முனை நிதியம் ஒன்றின் கீழ்த்தான் இந்த நிதியம் செயற்படப் போகிறது. இது சிறிலங்காவின் அரசியல் யாப்பிற்கு எதிரானது.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்ட நாளானது சிறிலங்கா வரலாற்றின் கறுப்புநாள். நாங்கள் ஆட்சியிலிருந்து வெளியேறியது சரிதான் என்பதை நிரூபிக்கும் வகையில் தான் இப்பொதுக்கட்டமைப்பும் உள்ளது.நாங்கள் அரசில் இருந்திருந்தால் இந்தப்பாவச் செயலுக்கு உடந்தையாக இருந்திருப்போம் என்றார் அவர்.

# கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பில் சிங்களவருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லை

## -ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கைச்சாத்திடப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பில் சிங்கள இனத்திற்குரிய பிரதிநிதித்துவம் அளிப்பதற்கான சரத்துக்கள் ஏன் இணைக்கப் படவில்லை? என்று ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஐ.தே.க.வின் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் சனிக் கிழமை வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் உயர் நிலைக்குழுவில் அரசுப்பிரதிநிதித் துவம் இருக்கின்ற போதும் சிங்கள இனத்திற்கான பிரதிநிதித்துவம் என்பது தனித்து ஏதும் இல்லை. இதை ஏற்கமுடியாது. பிரதேசக் குழுக்களிலும் சிங்களவர் பிரதிநிதித்துவம் இல்லாததால் சிறுபான்மை இனத்தவரே மேலாதிக்கம் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

கட்டமைப்பின் சரத்து ஆறு(சி), பிரதேச குழுவின் தலைவராக தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவர் இருப்பார் என்கிறது. அரச தரப்பு மற்றும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் துணைத் தலைவர்களாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. முன்னைய ஒபபந்தங்களில் அரச தரப்பினர் துணைத் தலைவர் நிலையில் இயங்கும்படியாக இருந்ததில்லை.

சிறிலங்கா அரசை கீழ்நிலைக்குத் தள்ளும் இதை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது.

அதேபோல சரத்து இரண்டு(பி) இல் டி.டிஇசட் எனப்படுகின்ற ஆழிப் பேரலைப் பாதிப்புப் பகுதி குறித்த விளக்கமும் சரத்து இரண்டு (சி)இல் சொல்லப்பட்டிருக்க குறிப்பும் முரண்பாடாக இருக்கின்றன. இந்தக் கடலோர ஆழிப்பேரலை பாதிப்புப் பகுதியான இரண்டு கிலோ மீற்றர் தொலைவுக்குள் மட்டுமே மீளமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பது அரசு குறித்து தெளிவான விளக்கமளிக்க வேண்டும்.

உள்ளூர் அரச அதிகாரிகளைப் புறக்கணித்துவிட்டு கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வது பாரிய விளைவுகளை ஏற்படுத்தாவிட்டாலும், நடைமுறையில் தடங்கல்களை ஏற்படுத்தக்கூடும் என்று ஐ.தே.க. கருதுகிறது என்றும் பீரிஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# தேர்தல் ஆணையாளர் மேற் கொள்ளவிருந்த பாகிஸ்தான் விஜயம் கைவிடப்பட்டது

தேர்தல் ஆணையாளர் தயாநந்த திஸாநாயக்க பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ரத்துச்செய்துள்ளார்.இரண்டு நாட்கள் விஜயம் ஒன்றை அவர் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்தார். ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு கைச்சத்திடப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையை அடுத்தே இந்த விஜயம் ரத்துச் செய்யப பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை அரசாங்க அச்சகத்தில் முழுமையான விமானப்படையினரின் பாதுகாப்பின் மத்தியில் தேர்தல் ஒன்றுக் கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அத்துடன் தேர்தல் அதிகாரி களுக்கான அறிவுறுத்தல்களும் அங்கு அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பெலியத்தபிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் தேடப்படுகிறார்

பெலியத்த பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரை கைது செய்யும் முயற்சியில் பெலியத்தை பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.இவர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த நிலையில் இருவரை தாக்கியுள்ளதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.தாக்குதலுக்கு உள்ளான இருவரும் தற்சமயம் அரசினர் மருத்துவ சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.அதேவேளை, எதிர்கட்சித் தலைவர் பயணம் செய்த வாகனத்தை கைப்பற்றி உள்ள பெலியத்தை பொலிசார் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

-சனாதிபதி மாளிகைப் பிரதேசத்தில்-

## ஆர்ப்பாட்டங்களைத் தடுக்க இராணுவத்திற்கு விசேட அதிகாரம்

சனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தில் இடம்பெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கு பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் விசேட அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, சனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தை பாதுகாப்பதற்கு பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் விசேட அதிகாரம் வழங்கியிருந்தது.

இந்த அதிகாரம் தற்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு பயன்படுவதாகவுள்ளது. பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும், சனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தில் ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும்,

இதனைத் தடுக்கும் நோக்கில் அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## 5இலட்சம் பாடப்புத்தகங்களை யுனிசெப் மீள அச்சிடுகிறது!

ஆழிப்பேரலையால் அடித்துச் செல்லப்பட்ட பாடப்புத்தகங்களை மீள அச்சிடும் பணியை யுனிசெப் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. 288 தலைப்பிலான புத்தகங்கள் தமிழ் ஆங்கில,சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் 4,80,000 பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன. மொத்த 9,00,000 அமெரிக்கடொலர் செலவில் இந்தப் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இவற்றில் 60 தலைப்பிலான புத்தகங்கள் அச்சிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதர புத்தகங்கள் ஜூலை பாடசாலை திறப்பின்போது வழங்குவதற்கு ஏதுவாக அச்சிடப்பட்டு வருகின்றன.

கொழும்பைச் சுற்றியுள்ள அச்சகங்களில் இதற்கான ஒழுங்குகளை சிறிலங்கா கல்வித்துறை அமைச்சகத்தின் வெளியீட்டுப்பிரிவு கொடுத்துள்ளது.

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சிறிலங்கா கல்வி அமைச்சுடன் யுனிசெப் நிறுவனம் மூன்றாண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்படி 25 பாடசாலைகள் மறுசீரமைப்பு 2006ஆம் சனவரிக்குள் நிறைவடைந்துவிடும் என்று யுனிசெப் நிறுவனத்தின் கல்விப்பணியக பொறுப்பாளர் புஸ்பஜயக்கொடி தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக காத்தான் குடியில் பேரணி

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று காத்தான்குடியில் பேரணியும் எதிர்ப்புக்கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.காத்தான்குடி நகரில் ஆரம்பித்த இந்தப்பேரணி மெத்தா மொஹீதீன் பள்ளிவாசல் முன்றலில் முடிவடைந்து அங்கு எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நாடளாவிய ரீதியில் எழுச்சிப்பேரணிகளை நடத்துகிறது.

நேற்று முன்தினம் இதன் ஆரம்பக்கட்டம் புத்தளத்தில் ஆரம்பமானது.இதன் தொடரில் ஒருவாரக்கால எழுச்சிப்பேரணிகளுக்காக காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிம் நேற்று கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

## பேரவை தலைவரின் வீட்டின் மீதான குண்டு வீச்சுக்கு கண்டனம்

திருகோணமலை தமிழ் பேரவையின் தலைவர் வீட்டின் மீது இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக பல தரப்பினரும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜயானந்த மூர்த்தி கருத்து தெரிவிக்கையில், இந்த சம்பவமானது அண்மைக்கால திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்துடன் சம்பந்தப்பட்டது என சந்தேகம் வெளியிட்டார்.எனவே இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என அவர் கேட்டுக்கொண்டார். (32)


நிலவு கணனி தொழில்நுட்பம்

கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. படிக்க விரும்புபவர்கள் 02. 07. 2005 இற்கு முன் பதிவினை மேற் கொள்ளவும்.

பாடநெறிகள்:-

☼ Diploma in M.S.Office
★ M.S.Word
★ M.S. Excel
★ M.S. Access
★ M.S.Power point
★ M.S.Front page.

☼ Graphies Designing
★ Adobe photo Shop
★ Macromedia Flash
★ CorelDraw

☼ Diploma in Hardware Engineering

☼ VIDEO Mixing

Note:- பாட நெறிகள் அனைத்தும் கணனி தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

கொழும்பில் பிரசித்தி பெற்ற MICOM கணனி நிறுவனத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஏனைய சேவைகள்:-
CD விற்பனை

சகலவிதமான Software, Games, English, சுயகற்றல் டிஜிற்றல் அல்பம் தயாரிக்க தேவையான ஊனுக்கள் எம்மிடம் உண்டு உடன் நாடுங்கள்

வீடியோ பின் புல (Video Background) CD க்கள் எம்மிடம் உண்டு.

(சி-12234)


## சந்திரிகா -தயாசந்தகிரி முறுகல் இராணுவத்தரப்புச் செய்தி தெரிவிப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், சிறிலங்கா முப்படை தளபதி தயாசந்தகிரிக்கும் இடையே முறுகல்நிலை தோன்றியுள்ளதாக சிறிலங்கா இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையில் கிழக்குப் பிரதேச கடற்படை தளபதியாக இருந்த சரத் வீரசேகரவை கொழும்புக்கு மாற்றினார் தயாசந்தகிரி. திருமலையில் மேற்கு கடற்படைத் தளபதியாக சரத் ரத்னகீர்த்தியை பணியமர்த்தினார்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவோ, கொழும்புக்கு மாற்றப்பட்ட சரத் வீரசேகரவுக்காக புதியதாக கடற்படை தலைமையக துணைத்தலைமை அதிகாரி பதவியை உருவாக்கி அவரை அதில் நியமித்தார்.

மேலும் சரத்ரத்னகீர்த்தியை கிழக்கு பிரதேசத்திலிருந்து மாற்றிவிட்டு அந்த இடத்தில் வசந்த கரன்னகொடவை நியமித்தார். இவர் வடக்கு மத்திய கடற்படைத்தளபதி ஆவார்.

இந்த அதிரடி மாற்றங்கள்,தயா சந்தகிரியின் உத்தரவுகள் செல்லுபடியாகாத நிலையிலே இருப்பதாகவும், தயா சந்தகிரிக்கும், சனாதிபதிக்கும் இடையேயான முறுகல் நிலைதான் இதற்குக் காரணம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. .

## ஜே.வி.பி யினர் உருவாக்கிய அரசாங்கமே அவர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியது

### ஐ.தே.கட்சி பா.உறுப்பினர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

ஜே.வி.பி யினர் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இணைந்து உருவாக்கிய அரசாங்கமே ஜே.வி.பியினர் மீது கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் நாட்டை பிரிப்பதற்கு முயற்சிப்பதாகக் கூறி ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.வி.பி யினர், தற்பொழுது ஆட்சியை இழந்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண இவ்வாறு கூறியுள்ளார்.

ஜே.வி.பி யினர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது விலை அதிகரிப்புக்கு எதிராக வீதியிலிறங்கிப் போராடியவர்கள் தற்பொழுது வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ள நிலையில் மௌனம் சாதித்துவருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள அவர். பல்வேறு உறுதிமொழிகளை வழங்கி ஆட்சிக்குவந்த ஜே.வி.பியினர் தற்பொழுது பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டை மீண்டும் போருக்கு இட்டுச்செல்வதற்கு முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, அரசாங்கத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்து மாபெரும் மக்கள்போராட்டமொன்றை நடாத்துவதற்கு தாம் தீர்மானித்திருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண அங்கு மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து நோர்வே வெளியுறவு அமைச்சர் பாராட்டு

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசும் கையெழுத்திட்டுள்ளதை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் வரவேற்றுள்ளார். இது குறித்து நோர்வே வெளிவிவகார அமைச்சு ஒஸ்லோவில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் அமைதிப் பேச்சுகளில் தொடர்புடைய இரு தரப்புகள் இத்தகைய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது மிக முக்கியத்துவமானது. கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக போர்ச் சூழலில் முதல் முறையாக இருதரப்பினரும் அரச நிர்வாக ரீதியாக தேசிய, பிரதேச மாவட்டமளவில் இணைந்து பணியாற்ற முன்வந்துள்ளனர். ஆறு மாத கால தொடர் முயற்சிகளுக்குப் பிறகு இருதரப்பினரும் கைச்சாத்திட்டிருப்பது ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

இப்பொதுக்கட்டமைப்பில் கையொழுத்திட்டமைக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் சிறிலங்கா அரசையும் நாம் பாராட்டுகிறோம். ஆழிப்பேரலையால் பெருமளவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் தரப்பினருக்கும் இப்பொதுக்கட்டமைப்பில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இப்பொதுக்கட்டமைப்பு மூலம் இருதரப்பினருக்கும் இடையே நல்லெண்ண உறவை மீளக் கட்டமைக்க முடியும், சர்வதேச நாடுகளின் அரசியல் மற்றும் பொருளியல் ஆதரவைப் பெறுவதற்கு இப்பொதுக் கட்டமைப்பானது மிகவும் அவசியம், இருப்பினும் யுத்த நிறுத்த ஒப்பந்தமானது நெருக்கடியில் உள்ளது அனைத்துத் தரப்பினரும் இயல்பு நிலையை உருவாக்க முன்வர வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

## அவசியம் ஏற்பட்டாலன்றி பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது

### அரசாங்கம் அறிவிப்பு

அவசியமான நிலைமைகளில் அதாவது வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அல்லது அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் மாத்திரமே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலொன்று நடாத்தப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை அரசாங்கம் ஆட்சியிலிருக்குமென வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி யும் தற்பொழுது தேர்தலொன்றுக்கு தயாரில்லாத நிலையில் பொதுத் தேர்தலொன்றை நடாத்தும் அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை.

அரசாங்கம் மாறினால் பொதுக்கட்டமைப்பின் நிலை என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், அரசாங்கம் மாறினாலும் பொதுக்கட்டமைப்பில் அது எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாதெனவும் கூறினார்.

இதேவேளை, சனாதிபதித்தேர்தல் அடுத்த வருடம் நவம்பர்மாதம் இடம்பெறுமென சுகாதாரத்துறை அமைச்சர் நிமால சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பு இ.த.அ. சபைக்கு வழிவகுக்காது நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவிப்பு

பொதுக்கட்டமைப்பு ஒருபோதும் விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கு வழிவகுக்காது பொதுக்கட்டமைப்புக்கமைய விடுதலைப் புலிகள் நிதிநிர்வாகத்தில் தலையிடமாட்டார்களென நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் நிவாரண மற்றும் புனரமைப்பு பணிகளுக்குத் தேவையான நிதியுதவியை இலங்கை மத்தியவங்கியும், மாவட்டச் செயலாளர்களும் வழங்குவார்கள்,

விடுதலைப்புலிகள் நிதிநிர்வாகத்தில் தலையிடமாட்டார்கள். அவர்கள் புனரமைப்புப் பணிகளை மாத்திரம் மேற்பார்வை செய்வார்கள்.

செலவு செய்யப்படும் அனைத்து நிதிகளையும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கண்காணித்துக் கொண்டிருக்கும். அத்துடன் ஜே.வி.பியினர் கூறிவரும் குற்றச்சாட்டுக்கு மாறாகவே பொதுக்கட்டமைப்பு அமைந்திருக்கின்றது. பொதுக்கட்டமைப்பு ஒருபோதும் விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சிஅதிகார சபைக்கு வழிவகுக்காதெனவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# சேதுசமுத்திர அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்துகொள்ள எனக்கும் மனமில்லை

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா



சேதுசமுத்திரத்திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க எனக்கு மனமில்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சேது சமுத்திரத்திட்டத்தின் அடிக்கல் நாட்டுவிழா எதிர் வரும் இரண்டாம் திகதி மதுரையில் நடக்கிறது. பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஆளுநர் பர்னாலா கலந்து கொள் கிறார்கள். இந்த விழாவில் பங்கேற்கப்போவதில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்தார்.

இது தொடர்பாக ஜெயலலிதா வெளியிட்ட ஐந்துபக்க அறிக்கையின் சாரம்சம் வருமாறு:- தமிழகத்திற்குப்பெரும் வளர்ச்சித்திட்டங்களைக்கொண்டு வருவதில் நான் எப் போதுமே முன்னிலையில் இருந்து வருகிறேன். எம்.ஜி.ஆரின் வேண்டுகோளின்பேரில்தான் சேது சமுத்திரக் கால்வாய்த்திட் டத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக 1981 ஆம் ஆண்டில் மத்தியரசு ஒரு குழுவை அமைத்தது. நான் மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தபோது, தேசிய பாதுகாப்புக் குறித்த கண்ணோட்டத்திலும் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். 1991 ஜுலைத்திங்களில் தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையில் சேது சமுத் திரக் கால்வாய்த்திட்டம் செயலாக்கப்பட வேண்டும் என்று வலி யுறுத்தி அப்போதைய பாரதப்பிரதமரிடம் கோரிக்கை மனு அளித்தேன். இதுபற்றிப் புதிதாக ஆய்வுமேற்கொள்ளும் பணியை என்னுடைய அரசுதான் 1994 ஆம் ஆண்டில் பல்ல வன் போக்குவரத்து ஆலோசனைப்பணிகள் நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

இவ்வாறாக சேதுசமுத்திரக் கால்வாய்த்திட்டம் நனவாவதை உறுதிப்படுத்துவதற்கு நான் முக்கிய காரணமாக இருந்திருக் கிறேன். இந்தக் கால்வாய்த் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக தக்க ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று நான் எப்போதுமே கூறி வந்திருக்கிறேன். ஆனால் இந்தத்திட்டத்திற்குத்தேவையான சுற்றுச் சூழல் அனுமதி நடைமுறைகளைப் புறந்தள்ளி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச்சூழல்-வனத்துறை அமைச்சகம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி மாநில அரசிடமிருந்து அவ்வமைச்சகம் தடையின்மைச் சான்றிதழ் பெற வேண்டியது சட்டப்படி அவசியம் என்று குறிப்பிட்டிருந்தா லும் கூட, தமிழக அரசின் தடையின்மைச் சான்றிதழுக்காக காத்திருக்காமல், இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதியை மத்தியச் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் வழங்கும்படி செய்யப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் பற்றி மாநிலஅரசைக் கலந்தாலோசிக்க வேண்டாமா? தமிழ்நாட்டின் பல்வேறு கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு என்னென்ன பாதிப்புக்கள் ஏற்படுமோ என்று எனக்குப் பெரும் கவலையாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள் ளார்.




சேது சமுத்திர கால்வாய்திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக இந்திய அகழ்வுப் பணிகழகத்திற்கும், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்திற்கும் இடையே ஒத்துழைப்ப உடன்பாடு இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு முன்னிலையில் கையெழுத்தான போது எடுத்தபடம்.

# கட்டடம் இடிந்து வீழ்ந்து ஆறு பெண்கள் சாவு

மும்பையில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. இதனால் மும்பையைச் சுற்றி உள்ள கார்ப் பகுதியில் மூன்றடுக்கு மாடிக்கட்டடம் ஒன்று இரவில் இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கி ஆறு பெண்கள் பரிதாபமாகப் பலியானார்கள்.ஐந்து பேர் காயமடைந்தனர்.

கட்டட இடிபாடுகளில் மேலும் சிலர் சிக்கி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அவர்களை மீட்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



ரூபா. 40 ஆயிரத்திற்கு விற்கப்பட்டு தப்பி வந்த மாணவி தனது பாட்டியுடன் தமிழகம் தர்மபுரி மாவட்ட பொலிசில் மனுக்கொடுக்க வந்தபோது.

# பீகாரில் தீவிரவாதிகள் தாக்குதல் பத்துப் பேர் பலி

பீகாரில் பொலிஸ் நிலையம்- வங்கிகள் மீது தீவிரவாதிகள் சரமாரியாக குண்டு வீசித்தாக்கியதில் 10பேர் பலியானார்கள்.

இந்திய பீகார் மாநிலத்தின் கிழக்கு சாம்ப் ரான் மாவட்டத்தின் மதுபான் நகரில் கடந்த வியாழன் பட்டப்பகலில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் நுழைந்து அங்குள்ள காவல் நிலையத்தை தாக்கி ஆயுதங்களை கொள் ளையடித்து தீ வைத்தார்கள்.அப்போது நடந்த கடும் சண்டையில் இரண்டு பொலிசார் பலி யானார்கள். அந்த நகரிலுள்ள ராஷ்டிரிய ஜனதாதளக் கட்சி உறுப்பினரான சியோகர் சீத்தாராம்சிங் வீட்டின் மீதும் அவருக்குச் சொந்தமான பெற்றோல் நிலையத்தின் மீதும் தீவிரவாதிகள் குண்டுகளை வீசினர். பின்னர் அந்த நகரத்தில் உள்ளவங்கியொன்றில் காவலாளியை சுட்டுக்கொன்று விட்டு வங்கியில் இருந்து ரூ.3இலட்சத்தை கொள்ளையடித்தார்கள். மத்திய வங்கியைத் தாக்கி அங்கிருந்து ரூ.8இலட்சத்தை சூறை யாடிவிட்டு தப்பிச்சென்றார்கள்.

இந்த சம்பவத்திற்கு பிறகு காவல் நிலையம் அருகே நான்கு தீவரவாதிகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் மூன்று பேர் நேபாள நாட்டைச்சேர்ந்த மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் என்பது தெரிய வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை மேலும் இரண்டு தீவிரவாதிகளின் உடல் அந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன.

இதற்கிடையே கிழக்கில் சாம்ப்பிரான் மாவட்டத்தில் கடந்தவியாழன் மத்திய பொலிஸ் படையினர் சிறப்பு அதிரடிப்படை யினர் மாவட்ட பொலிசார் ஆகியோர் தீவிர வாதிகளை தேடி அழிக்கும் பணியில் ஈடுபட் டனர். அப்போது நடந்த சண்டையில் அப்பாவி பெண் ஒருவர் பலியானார். இதன்மூலம் வன்முறைக்கு பலியானவர்கள் எண்ணிக்கை பத்து ஆக உயர்ந்துள்ளது.

# தயாநிதி மாறனுக்கு இளம் உலகத் தலைவர் விருது

இந்திய மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் தயாநிதிமாறனுக்கு இளம் உலகத்தலைவர் விருது வழங்கப்படவுள்ளது.

இந்திய மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட் பத்துறைஅமைச்சர் தயாநிதிமாறன் வரும்27 ஆம் திகதி அன்று சுவிட் சர்லாந்து நாட்டில் உள்ள செர்மாத் நகரில் இளம் உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்கிறார். உலக பொருளாதார அமைப்பின் அழைப் பின் பேரில் அவர் முதலாவதாக நடைபெறும் இந்த உச்சி மாநாட்டில் பேசவுள்ளார். வரும் 2020 ஆம் ஆண்டின் போது சர்வதேச சவால்களைச் சந்திப்பதற்கு ஏற்ற தலைமைத்துவம் குறித்து அவர் கருத்துப் பரிமாற்றம் செய்யவுள்ளார்.

இந்த மாநாட்டில் தயாநிதிமாறனுக்கு இளம் உலகத் தலைவர்விருது வழங்கப்படவுள்ளது. ஜோர்டானின் ஹஷேமைட் அரசி ரேணியா தலைமையிலான குழுவொன்று இவ்விருதுக்குரிய இளம் தலைவராக தயாநிதிமாறனைத் தேர்வு செய்துள்ளது.

# ஸ்ரீநகர் ஊடாக இந்தியாவர விண்ணப்பித்த பாகிஸ்தான் அமைச்சருக்கு அனுமதி மறுப்பு

பாகிஸ்தான் மந்திரி முஷப ராபாத் -ஸ்ரீநகர் பேருந்து மூலம் இந்தியா செல்ல இந்தியமத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது.

இந்திய காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகருக்கும் பாகிஸ்தான் காஷ் மீரில் உள்ள முஷபராபாத்துக்கும் இடையே பயணிகள் பேருந்து போக்கு வரத்து நடத்தப்பட்டு வருகிறது தெரிந் ததே.

ஸ்ரீநகரில் இருந்து செல்லும் இந்திய பேருந்து எல்லைக் கோட் டுக்குள்ளே நின்று வரும். அங்கே பயணிகள் இறங்கி எல்லையைக் கடந்து அப்பால் நிற்கும் பாகிஸ் தான் பேருந்தில் ஏறி முஷபராபத்த் செல்வார்கள்.

அதேபோல முஷாபராபாத்தில் இருந்து பாகிஸ்தான் பேருந்தில் வரும் பயணிகள் எல்லையில் இறங்கி இந்திய பேருந்தில் ஸ்ரீநகர் செல் வார்கள்.

இந்நிலையில் பாகிஸ்தான் தக வல் தொடர்பு மந்திரி ஷேக் ரஷீத் முஷபராபாத்-ஸ்ரீநகர் பேருந்து மூலம் இந்தியாவுக்குள்வர இந்திய மத்திய அரசிடம் அனுமதிகோரி இருந்தார். ஆனால் பேருந்து மூலம் இந்தியாவர மத்திய அரசு அனுமதி மறுத்துவிட்டது. பாகிஸ்தான் தக வல் தொடர்பு மந்திரி ஷேக் ரஷீத் தின் விண்ணப்பம் கிடைத்தது. அவரது பயணத்தில் உள்ள அனைத்து அம்சங்களையும் கருத்திற் கொண்டு அனுமதி மறுக்கப்பட்டதாக இந் திய வெளியுறவு அமைச்சக செய் தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மந்திரி ரஷீத் காஷ் மீர் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 1990 இல் முகாம் நடத்தியதாக காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் யாசின் மாலிக் கூறியிருந்தார். ஆனால் அதை அவர் மறுத்திருக்கிறார்.

மந்திரி ஷேக் காஷ்மீரில் தனது உறவினரைச் சந்திக்க வருவதாகத் தனது விண்ணப்பத்தில் கூறியிருந் தார். ஆனால் அந்த உறவினரின் முகவரிரியக் குறிப்பிடவில்லை.

தனக்கு அனுமதி மறுக்கப்பட் டது பற்றி ரஷீத் அதிர்ச்சியும் கவ லையும் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர மக்களின் அமைதியான சுதந்திரப் போராட்டத்திற்கு நான் தொடர்ந்து ஆதரவு அளிப்பேன் நான் காஷ்மீரைப் பார்க்கும் நாள் வரும் என்று ரஷீத் மேலும் கூறியிருக்கிறார்

# சுனாமி வதந்தியால் மக்கள் பதறியோட்டம்

தமிழகம் நாகையில் மீண்டும் நேற்றுசுனாமி ஏற்படும் என்று துண்டுப் பிரசுரம் மூலம் வெளியான அச்சத்தால் சிலர் ஊரைவிட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த 26.12.2004 அன்று யாரும் எதிர்பாராத நிலையில் சுனாமி பேரலை நாகை மற்றும் மாவட்டம் முழுவதும் தாக்கியது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகியும், கோடிக்கணக்கான மதிப்புள்ள பொருட்கள் நாசமாகியுமுள்ளன. சுனாமி ஏற்பட்டு நேற்றுடன் சரியாக ஆறு மாதம் ஆகின்றது. இந்நிலையில் பேராசிரியர் ஒருவர் 26 ஆம்திகதி அதாவது நேற்று மீண்டும் சுனாமி ஏற்படும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

சிலர் அந்தப் பேராசிரியர் வெளியிட்ட கடிதத்தின் நகல் எடுத்து ரூபா.1,ரூபா 2 மற்றும் ரூபா 3 எனப் பல்வேறு விலைகளில் விற்றுள்ளனர். இதை ஏராளமானோர் வாங்கிச் சென்றுள்ளனர்.

இதைப்படித்த பொதுமக்கள் இந்தச் செய்தி ஆதாரபூர்வமாக இருப்பதாக நம்பி ஒரு சிலர் தங்களது குடும்பங்களுடன் உறவினர்கள் வீட் டிற்குச் சென்றுள்ளனர். மேலும் இந்தச் சுனாமி குறித்த பீதியுடன் தற் காலிக குடியிருப்புக்களில் உள்ள பொதுமக்கள் எந்தநேரத்தில் சுனாமி வருமோ என்ற அச்சத்துடன் இரவு முழுவதும் தூங்காமல் இருந்தனர்.

கடல் அமைதியாக இருக்கிறது. இருந்தாலும் ஏற்கனவே சுனாமியால் ஏற்பட்டபாதிப்பால் சிறிய சம்பவங்கள் மற்றும் தகவல்களைக் கேட்டால் பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். ஆனால் சுனாமி வராது என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### புனித சென்பற்றிக்ஸ் கல்லூரி 15 வயது அணியினர்



இடமிருந்து வலம், வே. கமில்டன், சி. மிலாண்டோ, ம. அன்ரன் நிலோஷன் (தலைவர்), ப. நவதீபன், நகல்ஷன், ம. மனோஸ், அ.செ. நிசாந்தன், க. எடினோயூரன், சு. சாம்றோய், பொ. யூட்கேதீஸ்வரன், ஜெ. தர்ஷன், லோ. கஜமுகன், பொ. மைக்கல் றொபோட், கி. ஜெயதீபன், சு. றுக்மன் நிசூதன், ம. சஜீந்திரன்.

### கிளி/கிளிநொச்சி ம. வி. 15 வயது கடினப் பந்து அணி



இடமிருந்து வலம், ஆ. அனுசாந், வா. சஞ்சீவன், க. சஞ்சீவன், சி. கிருபாகரன், பா. துசிகாந், பி. தயாகுலன், த. தவக்குமரன், க. செந்தூரன், த. பகீரதன், கி. கிருசாந், யோ. கௌதமன், உ. றஜதீஸன், ந. மயூரன், ம. ஜனகன்.

(லோ,தீ)

## பாடசாலைகளுக்கிடையிலான அஸ்ரா கிண்ண கிரிக்கெட் யாழ்.சென் பற்றிக்சை எதிர்கொள்கிறது கிளி.ம.வி அணி

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் "அஸ்ரா கிண்ண" கிரிக்கெட் போட்டித் தொடரில் 15 வயது பிரிவினருக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒன்றில் கிளிநொச்சி ம.வி அணியை யாழ். சென் பற்றிக்ஸ் அணி இன்று எதிர்த்தாடுகின்றது.

கிளிநொச்சி மத்திய மைதானத்தில் இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியில் பங்கேற்பதற்காக யாழ்.சென் பற்றிக்ஸ் 15 வயதுப்பிரிவு அணி நேற்று கிளிநொச்சி வந்தடைந்தது.

இதேவேளை கிளிநொச்சி ம.வி அணியினர் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேற்படி அஸ்ரா கிண்ண போட்டியில் நேற்று முன்தினம் யாழ்.யூனியன் கல்லூரி 17 வயது பிரிவு அணியுடன் கிளி ம.வி 17 வயது அணி போட்டியிட்டமை குறிப்பிடத் தக்கது.

## செரினா அதிர்ச்சித் தோல்வி

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், சக வீராங்கனையான ஜில்கிரேபசிடம் 3-6,6-7 என்ற செட்கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். இதையடுத்து செரீனா இம்முறை விம்பிள்டன் சம்பியன் பட்டம் பெறும் வாய்ப்பை இழக்கிறார். அதேசமயம் இவரது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸ் மூன்றாவது சுற்றிலிருந்து முன்னேறி நான்காவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார். நான்காவது சுற்றில் ஜில் கிரேபசிடம் மோதுகின்றார்.

## நியூசிலாந்துக்கான கிரிக்கெட் சுற்றுலா சிம்பாப்வேக்கு அனுமதி வழங்கக்கூடாது



நியூசிலாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சரான பில்கொப் வரும் டிசம்பர் மாதம் தமது நாட்டுக்குச் சுற்றுலா மேற்கொள்ளவிருக்கும் சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு அனுமதி வழங்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு சிம்பாப்வே மனித உரிமைகள் விடயத்தில் சீரழிந்த நாடாகக் காணப்படுவதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கிரிக்கெட் அணிக்கு இந்த அனுமதி மறுப்பு எதிர்பார்க்காத ஒன்றாக இருக்கலாம் என்று தெரிவித்த அவர் இந்த விடயம் இன்னும் அமைச்சரவைக்கு கொண்டு செல்லவோ சட்ட நடவடிக்கைக் குள்ளாக்கப்படவோ இல்லை என்றார். அவர் மேலும் தெரிவிக்கும்போது; றொபர்ட் முகாபேயின் சர்வாதிகார ஆட்சியில் ஏற்படும் திடீர் மனித உரிமை மீறல்களின் காரணமாக நியூசிலாந்து அரசு சிம்பாப்வே தரப்பினரை வரவேற்காது என்றார்.

எனினும், வரும் ஆகஸ்ட் மாதம் நியூசிலாந்து அணி சிம்பாப்வே செல்வதில் மாற்றமிருக்காது என்றும் சிம்பாப்வே அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இங்கிலாந்து அணியும் சிம்பாப்வே செல்ல தயக்கம் காட்டியதும் பின்னர் ஒரு நாள் போட்டிகளில் மட்டும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி செல்வாநகர் ஜெயக்கொடி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வு நடைபெற்றது. இதில் முன்பள்ளி மாணவி ஒருவர் கண்கள் கட்டிய நிலையில் பொருட்களை கண்டு பிடிக்கும் போட்டி ஒன்றில் பங்குபற்றும் காட்சியினையே காண்கின்றீர்கள்.

## உலகக்கிண்ண தகுதிகாண் கிரிக்கெட் பொண்டிங், அத்தப்பத்து வாழ்த்து



அடுத்த மாதம் அயர்லாந்தில் நடைபெறவிருக்கும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு தகுதிகாண் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளுக்கு சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் மாவன் அத்தப்பத்துவும் அவுஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கி பெண்டிங்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.


12 நாடுகள் பங்கேற்கும்இத் தொடரில் தெரிவாகும் ஐந்து நாடுகள் 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணத்தொடரில் கலந்து கொள்ளும். அதன்படிமுதலாவது பிரிவில் அயர்லாந்து, பெர்முடா, உகண்டா, ஐக்கிய அரபு எமிரேட், அமெரிக்கா டென்மார்க் ஆகிய நாடுகளும் இரண்டாவது குழுவில் ஸ்கொட்லாந்து, நெதர்லாந்து, பபுநியுகினி, நமிபியா, ஓமான், கனடா ஆகிய நாடுகளும் போட்டிகளில் பங்கேற்கின்றன.

1979 ஆம் ஆண்டு சிறிலங்கா அணி இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தொடரில் தனது முதலாவது வெற்றியைப் பெற்றதை அத்தப்பத்து குறிப்பிட்டுள்ளார். இந்த தகுதிப்போட்டிகளில் எந்த ஐந்து அணிகள் தகுதிபெறும் என்பதை அறிய தான் மிகுந்த ஆவலாக இருப்பதாகவும் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் குறிப்பிடும்போது; உகண்டா, ஓமான் போன்ற நாடுகள் போட்டியின்போதும் அவுஸ்ரேலிய தரத்தில் இருந்து வெகு தூரத்தில் இருக்கின்றன. ஆயினும் கிரிக்கெட் உலகில் சர்வதேச கிரிக்கெட்டின் அர்த்தத்தை நாம் புரிந்து கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறும் இத் தகுதிப்போட்டி 25 மைதானங்களில் 42 போட்டிகளாக நடைபெறும்இறுதிப் போட்டி வரும் யூலை 13ஆம் திகதி டர்பனில் நடைபெறும்.

## தரவரிசையில் முதலிடம் அவுஸ். அணிக்கு 2.25 கோடி



எல்.ஜி.,ஐ.சி.சி., பட்டியலில் முதலிடம் வகித்ததற்காக அவுஸ்திரேலிய அணி சுமார் 2.25கோடி ரூபாய் பரிசு பெற்றது.

சர்வதேச கிரிகெட் சபையில் (ஐ.சி.சி) பிரபல எல்.ஜி., நிறுவனத்துடன் இணைந்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இதில் ஓராண்டு காலத்தில் அதிகநாட்கள் முதலிடம் வகிக்கும் அணிக்கு பரிசு வழங்குவதாக அறிவித்திருந்தது. இதன்படி 2004 ஏப்ரலில் இருந்து அவுஸ்திரேலிய அணி டெஸ்ட், ஒருநாள் என இரு பட்டியலிலும் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. இதன் மூலம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி. பரிசு வழங்கியுள்ளது. ஒரு நாள் டெஸ்ட் தரவரிசை பட்டியலுக்கு தலா ரூபா ஒரு கோடியே 12.5 இலட்சம் உட்பட 2.25 கோடிக்கான காசோலையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைமை செயலர் ஜேம்ஸ் சதர்லாண்ட் பெற்றுக்கொண்டார்.

எல்.ஜி.,எலக்ட்ரோனிக்ஸின் தென் மேற்கு ஆசியத்தலைவர் கே.ஆர், கிம் கூறுகையில்; ஒருநாள்மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான உண்மையான மற்றும் நம்பத்தகுந்த கிரிக்கெட் தரவரிசை என்றார்.

## விளையாட்டு

## முல்லை மாவட்டத்தில் கால்பந்து பயிற்சி

முல்லை மாவட்ட விளையாட்டுத் துறையும், முல்லை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனமும் இணைந்து முல்லை மாவட்ட எல்லைக்குட்பட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சியும், மாவட்ட அணித் தெரிவும் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் காலை எட்டு மணி முதல் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நடைபெறுமென முல்லை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் எம். காளி தெரிவித்துள்ளார். (20)




சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் ராஜன் (ராஜசிங்கம்) அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவாகவும், யாழ். செல்லும் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் தணிகைச்செல்வி அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவாகவும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் கில்மன் நினைவாகவும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுக் கிண்ணத்துக்கான போட்டி நேற்று நடைபெற்றது. இதில் வடமுனை, தென்முனை, மத்திய அணிகள் கலந்து கொண்டன. இதேவேளை, லெப். கேணல் ராஜசிங்கம் நினைவாக நடாத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் வெற்றியீட்டிய அணிக்கு கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். (ச)





பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



## சிந்தனைக்கு

நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம்; எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# ஏன் இந்த எதிர்ப்பு!

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகிய பொதுக்கட்டமைப்பு உடன்பாடு ஒரு அதிகாரிகள் மட்டத்திலான உடன்பாடாகும். இதனை அரசாங்கத்தரப்பில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின்செயலாளரும் விடுதலைப்புலிகள் தரப்பில்திட்டமிடல் செயலக பிரதிப் பணிப் பாளரும் கையொப்பம் இட்டதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

அதாவது இவ் உடன்பாட்டில் அரசியல் அதிகாரங்கள், உரிமைகள் தொடர்பான விவகாரங்கள் எதிலும் இணக்கம் காணப்பட்டதாகவோ அன்றி தமிழர் தாயகப்பகுதியின் அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக தமிழ் மக்களிடம் அன்றி விடுதலைப்புலிகளிடம் அதிகாரம் எதையும் இப்பொதுக்கட்டமைப்பு வழங்குவதாகவோ இல்லை. அது மட்டுமல்ல இப்பொதுக்கட் டமைப்பின் ஆயுட்காலம் ஆக ஓராண்டுகள் வரையிலானது என்பதும் முக்கியத்துவமானதாகும்.

அவ்வாறானால் சிங்களப் பேரினவாத சக்திகள் இப்பொதுக் கட்டமைப்புக்குறித்து கூச்சல் போடுவது ஏன்? அதிகாரம் எதையும் பகிர்ந்தளிக்காத அதிகாரிகள் மட்ட சபை ஒன்றை உருவாக்க அரசாங்கம் இவ்வாறு இழுத்தடித்தது ஏன்?

இங்கு இரண்டு முக்கிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. ஒன்று சுனாமி அனர்த்தப் புனர் நிர்மாணத்திற்கென கிடைக்கப்பெறும் உதவிகளில் கணிசமான பகுதி (சுமார் 60 சதவீதம் அளவில்) தமிழர் தாயகப்பகுதிக்குச் சென்று விடும்; இது அல்லல் படும் தமிழ் மக்கள் வாழ்க்கையை சீர் செய்வதற்கு உதவிவிடும் என்ற கவலை.

சிங்கள ஆட்சியாளர்களைப்பொறுத்தும், பேரினவாதிகளைப் பொறுத்தும் இலங்கையிலுள்ள சிங்களவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் அனைவரும் இரண்டாம் தரப்பிரஜைகளே. அவர்களுக்கு சம பங்கீடோ, சமநீதியோ வழங்கப்படுதல் என்பது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதொன்றல்ல. இதுவரை காலத்தில் அவ்வாறு எதுவும் நடந்ததுமில்லை. இயற்கை அனர்த்த நிகழ்வுகள் போதும் கூட அவ்வாறே அவர்கள் நடந்து கொண்டார்கள்.

ஆனால், தற்போதைய பொதுக்கட்டமைப்பு பாதிக்கப்பட்ட சகலருக்கும் சம அளவில் நிவாரணப்பணிகளை மேற்கொள் வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். சிறுபான்மை இனத்தவருக்குச் சென்ற நிவாரணப் பொருட்களையே வழிமறித்துக்கொள்ளையிட்டும், அபகரித்துச்செல்லும் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளால் சிங்களவர்அளவில் தமிழருக்கு நிவாரணம் கிடைக்கப்பெறுதல் என்பதும் எவ்வாறு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும்?.

இப்பொதுக்கட்டமைப்பை தீவிரமாக பேரினவாத சக்திகள் எதிர்ப்பதற்கு அடுத்த முக்கிய காரணமாக அமைவது பொதுக்கட்டமைப்பு அதிகாரப்பரவலாக்கல் எதுவும் அற்றதாயினும் இதனைஅடிப்படையாக கொண்டு இனப்பிரச்சினைதீர்வு விடயத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை மற்றும் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பான முடிவுகள் எட்டப்படுதலைதவிர்த்தல் என்பதற்கானதே. அவ்வாறு இல்லாது விடில் அதிகார மட்டத்திலான அதிகாரங்கள் எதுவும் பகிர்ந்தளிக்கப் படாத பொதுக்கட்டமைப்பிற்கு இத்தகைய எதிர்ப்பு ஏன்? எதற்காக.?

பொதுக்கட்டமைப்பைத் தீவிரமாக எதிர்க்கும் -அமுல்படுத்த அனுமதிக்கப்போவதில்லை என சவால்விடும் ஜே.வி.பி க்கோ அன்றி ஜாதிகஹெல உறுமயவிற்கோ இப்பொதுக்கட்டமைப்பு அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டதொன்றல்ல. சர்வதேச உதவிகளைக் கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு நிவாரணப்பணிகளை ஒழுங் கமைக்கும் ஒரு அமைப்பே என்பது தெரியாமலிருக்க நியாயமில்லை.

அத்தோடு இது ஒரு தற்காலிக ஏற்பாடே என்பதும் தெரியாததல்ல. அவ்வாறிருந்தும் அவர்கள் எதிர்ப்பதன் நோக்கம் இப்பொதுக்கட்டமைப்பு இனப்பிரச்சினைத்தீர்வுக்கான முன்னேற்பாடாக/ அடிப்படையாகக் கொள்ளப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே.

இத்தகைய சிந்தனையின் பாற்பட்டே பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக பெரும் எடுப்பிலான நடவடிக்கைக்கு சிங்களப் பேரினவாதசக்திகள் முற்பட்டு நிற்கின்றன. இவ்எதிர்ப்பானது பொதுக்கட்டமைப்பின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் பலமிக்கதாகவுள்ளது.

இவ்வாறாக அதிகாரமற்ற பொதுக்கட்டமைப்பின் எதிர்காலமே கேள்விக்குள்ளானதாக இருக்கையில்எவ்வாறு சம அளவிலான அதிகாரங்களுடன் கூடிய இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபையோ அன்றி, வேறு அரசியல் தீர்வொன்று சாத்தியமானதாக முடியும்?

பௌத்த சிங்களப் பேரினவாதசக்திகள் என்றுமே அரசியலில் களயதார்த்தத்திற்கு இடம் கொடுப்பதாக இல்லை. இலங்கையில் நிலவும் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பௌத்தசிங்கள பேரினவாதசக்திகளின் இத்தகைய நிலைப்பாடே காரணமாகும். ஆனால் இத்தகையப் போக்கு தொடருமானால் பொதுக்கட டமைப்பும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை போன்றவை நடைமுறைக்கு வராமலே போகலாம். இத்தகையதொரு சூழ்நிலை யில் தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போராட்டத்தைத் தொடருவது தவிர்க்க முடியாது போகலாம்.

# சந்திரிகா-மங்கள மோதல் தீவிரம்; சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தகவல்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான மங்கள சமரவீரவுக்கும் இடையேயான மோதல் தீவிரமடைந்துள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் பொதுக் கட்டமைப்பில் அரசு கைச்சாத்திட்ட நேரத்தில் அமைச்சர்கள் சரத் அமுனுகமவுக்கும், மங்கள சமர வீரவுக்கும் கடுமையான வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.

அரசை சீர் குலைத்ததுடன் தெருவில் நடமாட முடியாத படியான சூழ்நிலையை உருவாக்கி விட்டீர் கள் என்று சரத் அமுனுகமவிடம் மங்கள கோபமாகக் கூறியுள்ளார். மேலும் சில கடுமையான சொற் பிரயோகங்களையும் மங்கள பயன் படுத்தியுள்ளார். அமைச்சர் சரத் அமுனுகமவும் உங்கள் சொந்த நல னுக்காக ஜே.வி.பியுடன் கைகோர்த் துக் கொண்டு நாட்டு நலனைக் கைவிட்டு விட்டீர்கள் என்று பதில் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து பிரதி மின்சாரத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுடனும் மங்கள சமரவீர மோதியுள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களைக் காட்டிக் கொடுத்து விட்டீர்களே என்று கூறியுள்ளார். மகிந்தானந்த அளுத்கமகேவும் சரத் அமுனுகமவும் தெரிவித்த குற்றச்சாட்டையே கூறி சனாதிபதியையும் சுதந்திரக் கட்சியையும் ஜே.வி.பியுடன் சேர்ந்து காட்டிக் கொடுத்தவர் நீங்கள் தான் என்று கூறியுள்ளார். பொதுக் கட்டமைப்பு விடயத்தில் அரசு கவிழாத நிலையில், ஆதரவு கிடைத்துள்ள நிலையில் விரக்தி அடைந்ததாலேயே மங்கள இவ் வாறு அனைவரையும் சாடியதாகவும் மகிந்தானந்த அளுத்கமக கூறி யிருக்கிறார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவுக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே பல பிரதி அமைச்சர்களிடம் மிகக் கடுமை யான, மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மங்களசமரவீர வெளிப்படுத்திருக்கிறார்.

இந்த நிலையில் தான் தன்னைச் சந்திக்க வருமாறு மங்கள சமர வீரவிற்கு கடந்த வெள்ளியன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்தார். ஆனால் அந்த அழைப்பை மங்கள சமரவீர நிராகரித்து விட்டார். சனாதிபதியின் அழைப்பு மங்களவிற்கு கிடைத்த போது அவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் தான் இருந்துள்ளார் என்றும் கூறப் படுகின்றது. ஆனால் சனாதிபதி செயலகத்திலிருந்து வந்த தொலை பேசி அழைப்பை ஏற்க மங்கள சமரவீர மறுத்துவிட்டாராம்.

மங்கள சமரவீர சந்திப்புக்கு வராத நிலையில் சனாதிபதியும் தனது பிள்ளைகளுடன் திக்வெல வுக்குப் புறப்பட்டு சென்று விட்டாராம்.

இதனிடையே ஜே.வி.பி ஆதரவுடன் பிரதமர் மகிந்த ராபக்ஷவை சனாதிபதி வேட் ப்ாளராக முன்நிறுத்தும் பணி களை யும் மங்கள சமரவீர தீவிரப்படுத் தியுள்ளதாகவும் தெரிகிறது. இது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பாசிலுடன் ஆலோசனை நடத்திய மங்கள சமரவீர மகிந்தராஜபக்ஷவின் சனாதிபதித் தேர்தல் பிரச்சார செயற்திட்டங்களை உருவாக்க தனிச் செயலகம் ஏற்படுத்துவது குறித்தும் விவாதித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே மங்கள சமரவீர தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைவதற்கான வாய்ப்புக் களை மறுப்பதற்கில்லை என்று இந்தத் தகவல்களைச்சுட்டிக்காட்டி கொழும்பு அரசியல் அவதானிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

# நவம்பரில் சனாதிபதித் தேர்தல்? தேர்தல் திணைக்களம் தகவல்!

சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறக்கூடும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க பதவியேற் றார்.பின் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி இராண்டாம் முறையாக சனாதிபதி பதவிப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

இரண்டாம் முறையாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்ற போது தமது பதவிக் காலத்தை 2006 நவம்பர் வரை நீடித்துக்கொண்டதாக கூறப் பட்டது.இருப்பினும் அரச வர்த்த மானியில் தேர்தல் திணைக் களத்தால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி இரண்டாம் முறையாக பொறுப்பேற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முறையான பதவிக்காலம் மேற்குறிப்பிட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகளில் முடிவடையும். தனது இரண்டாம் பதவிக்காலம் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி தொடங்குவதை 2000ஆம் ஆண்டு தாக்கல்செய்த அரச வரைபு ஒன்றில் பதிவு செய்துள்ளார். இதன்படியே டிசம்பர் 2005 ஆம் ஆண்டுக்குள் அவரது ஆறு ஆண்டுகால பதவிக்காலம் முடி வடைகிறதுஎன்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நவம்பரில் சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் ஐக்கிய தேசியக்கட்சி தனது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை களத்தில் இறக்கிவிட்டிருக்கிறது. ஜுலை இரண்டாம் திகதிமுதல் இதற்கான தீவிர பரப்புரைக் கூட்டங் களை நடத்தவுள்ளார்.

இதனிடையே எதிர்வரும் 30ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் நடைபெறவுள் ளது. இக்கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ அல்லது சுற்றுலாத்துறை அமைச் சர் அனுராபண்டாரநாயக்க இருவரில் ஒருவர் சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படக்கூடும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சர்ச்சைக்குரிய அமைச்சரும் ஜே.வி.பியுடன் நெருக்கமான உறவு கொண்டுள்ள மங்கள சமரவீர முன்மொழியத் திட்டமிட் டுள்ளதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் சனாதிபதி தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவையும் முன்மொழியக் கூடும் என்றும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அரசாங்கம் உடைந்ததற்கு நோர்வேதான் காரணம்: சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு உடைந்ததற்கு நோர்வே அனுசர ணையாளர்கள்தான் காரணம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக குற்றம் சாட்டி யுள்ளார்.

கடந்த வியாழன் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் மற்றும் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் ஆகியோருடனான சந்திப் பின்போது இக்குற்றச் சாட்டை நேரடியாக நோர்வே தரப்பிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

ஆளும் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேற வேண்டும் என்ற நோர்வேயின் எண்ணம் நிறை வேறிவிட்டது. ஆனால் ஆளும் அரசு பலவீனமடைந்து விட்டது என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். மேலும் நோர்வே யின் இந்த நடவடிக்கைகள் மூலம் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வழி வகுத் துள்ளனர் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

ஆனால் இதைக்கேட்டுக்கொண்ட நோர்வே தரப்பினர் இப்படியான திட்டங்கள் எதுவும் தங்களுக்கு இல்லை என்றும் அனுசரணை யாளர்கள் என்ற வகையில் நாம் அமைதிப் பேச்சுக்களை மீளவும் மேற்கொள்ள வேண்டியதற்கான சூழல்களையே மேற்கொண்டு வருவதாகவும் பதிலளித்துள்ளனர்.

# வெடிபொருட்களைக் கண்டுபிடிக்க ஜேர்மனியிலிருந்து மோப்பநாய்கள்

(கொழும்பு)

குண்டுகள் மற்றும் வெடிபொருட்கள் என்பவை புதைக்கப்பட்டிருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஜேர்மன் நாட்டிலிருந்து 30 மோப்ப நாய்களை இறக்குமதி செய்ய சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜேர்மன் செப்பர்ட் வர்க்கத்தைச் சேர்ந்த 15 மோப்ப நாய்களும், டொபர்மேன் வர்க்கத்தைச் சேர்ந்த 15 நாய்களும் இவ்வாறு கொண்டு வரப்படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியிலிருந்து இரண்டு கட்சிகள் வெளியேறத் திட்டம்?

(கொழும்பு)

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து மேலும் இரண்டு கட்சிகள் வெளியேறக் கூடுமென்று தெரிகிறது.

பாராளுமன்றத்தில் பொதுக் கட்டமைப்புப் பிரேரணை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக தங்கள் கட்சிக்கு இது தொடர்பான விபரங்களைத் தெரிவிக்கவில்லை என்று மகாஜன ஏக்சத் பெரமுன மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவை குற்றம்சாட்டியுள்ளன.

எமக்குத் தெரிவிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு விபரங்களுக்கும் வெள்ளிக்கிழமையன்று கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன என்று மகாஜன ஏக்சத் பெரமுன தலைவரும், அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த வெள்ளிக்கிழமையன்று கொடுக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு சரத்துக்களைப் படித்தபோது சில சரத்துக்கள் சிறிலங்காவின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் எதிரானதாக இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தோம். எமது அடுத்த செயற்திட்டம் குறித்து கட்சியின் மத்திய குழு விரைவில் முடிவெடுக்கும் என்றார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சேகு இஸ்ஸதீனும் தமது கட்சியின் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு சில உறுதிமொழிகளை சனாதிபதி உடனடியாக அளிக்க வேண்டும் என்பதற்காக அவசர சந்திப்பை ஏற்பாடு செய்யக் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று கூறினார்.

இந்த இரு கட்சிகளின் அதிருப்தியால் இவை இரண்டும் அரசிலிருந்து வெளியேறிவிடுமோ என்ற அச்சத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சர்களும் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவிலிருந்து திரும்பியவர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்பு இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிவந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு சர்வதேச அமைப்பினால் (ஐ.ஓ.எம்.) தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அந்த வகையில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்து பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள பதிவுகளை மேற்கொண்ட குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் வைத்து இன்று காலை 10.00 மணி முதல் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேபோன்று நாளை பூநகரிப் பிரதேசத்தில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு பூநகரிப் பிரதேச உப செயலகம் ஜெயபுரத்தில் வைத்தும் நாளை மறுதினம் கண்டாவளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் வைத்தும், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதியன்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்தும் மேற்படி தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதென சர்வதேச அமைப்பின் திட்ட அலுவலர் அ. உதயகுமார் தெரிவித்துள்ளார். (சோ)

# இனம்தெரியாதோர் துப்பாக்கிச்சூடு; மட்டக்களப்பில் ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவி வீதியில் உள்ள வீரபத்திரர் கோயிலுக்கு அருகில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தம்பிராஜா மகேஸ்வரராஜா (வயது-31) என அடையாளம் காணப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் மட்டக்களப்பு மருத்துவமனையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூடு நடைபெற்ற பகுதி உயர் பாதுகாப்பு வலயம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இரண்டு மாதங்களுக்கு முன்னர் இவரின் செங்கலடி வீட்டின் மீது குண்டு வீச்சு நடத்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (32)

-விமான சேவைத் திணைக்கள உபதலைவர் பதவியிலிருந்து-

# பொதுக்கட்டமைப்பை ஆட்சேபித்து ஹிஸ்புல்லா நேற்று இராஜினாமா

(கொழும்பு)

சிறிலங்கா விமான நிலைய மற்றும் விமான சேவைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட உப தலைவர் பதவியிலிருந்து தேசிய ஐக்கிய முன்னணியின் மூத்த உறுப்பினர் எம்.எல்.ஹிஸ்புல்லா நேற்று இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை விமான சேவைகள் துறைமுக அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று நண்பகல் காத்தான் குடியிலுள்ள தனது அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை கூட்டிய அவர் இந்த இராஜினாமா அறிவிப்பை வெளியிட்டார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறியதாவது; சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை. பொதுக் கட்டமைப்பினூடாக கிழக்கு மாகாணத்தின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி என்பது கிளிநொச்சியிலிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதை எதிர்த்தும் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படாமையைக் கண்டித்தும் பதவியை இராஜினாமாச் செய்துள்ளேன்.

ஆளும் கட்சியில் இருந்து தேசிய ஐக்கிய முன்னணி இன்னும் 48 மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும். இல்லையேல் தான் அக்கட்சியில் இருந்து விலகிக்கொள்ள நேரிடும் என்றார் அவர்.

முன்னதாக தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு கிளைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பொதுக்கட்டமைப்பினூடாக முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டணி அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவை தேசிய ஐக்கிய முன்னணி விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் 48 மணித்தியாலயத்தினுள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பேரியல் அஷ்ரப்பிற்கு காலக்கெடு விதித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## போராளிகளின்....

அந்தப் பகுதி ஊடாக பயணம் செய்கின்ற போது ஒரு மேலதிக பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி இந்த வழித்துணைக்கு பாரமேற்று போராளிகளைப் பொறுப்பேற்ற படைத்தரப்பினருக்கு இருந்திருக்க வேண்டும். அந்த வகையான பயணங்களிலே தாமதத்தை ஏற்படுத்தும் வகையில் மெத்தனமான நடைமுறைகளை அவர்கள் மேற்கொள்வதோடு இவ் வகையான தாக்குதல் ஏற்படக்கூடிய ஒரு பொறுப்புணர்ச்சி அற்ற பயண வழி ஏற்பாட்டையும் அவர்கள் செய்திருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல்துறை...

முக்கிய ஆவணங்கள் சிலவற்றையும் அக்குழுவினர் எடுத்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இத்தாக்குதல் நடந்தபோது அலுவலகத்தில் தமிழீழ அரசியல்துறையினர் எவரும் இல்லை. தாக்குதல் நடத்தப்பட்ட அலுவலகம் அக்கறைப்பற்று-பொத்துவில் பிரதான வீதியில் சிறிலங்கா இராணுவ ஆக்கிர மிப்புப் பகுதியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ...

அத்துடன் காரைநகரிலுள்ள தனியார் காணிகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் யாவுமே அரசாங்கத்திற்கு சொந்தமானது எனப் படையினர் கூறி பொது மக்களுடன் விவாதித்தனர்.

அத்துடன் மேலதிக கடற்படையினரும் விளையாட்டு மைதானத்தைச் சுற்றிவர குவிக்கப்பட்டனர். மூன்று வயதுக்கும், ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களது விளையாட்டுத் திறனை திட்டமிட்ட வகையில் குழப்புவதற்கு படையினர் முற்பட்டமை பொது மக்களை ஆவேசங் கொள்ள வைத்தது.

விளையாட்டுப்போட்டி தொடர்ந்து நடைபெற்று நிகழ்ச்சி இறுதியிலேயே தேசியக்கொடி இறக்கப்பட்டது. தனியாருக்குரிய வயல் காணியிலேயே, விளையாட்டுப் போட்டி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கி முனையில் இடம் பெற்ற மக்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுவர்களது விளையாட்டுப் போட்டியினை அச்சுறுத்திக் குழப்ப முயன்றதற்கும், போர்நிறுத்த உடன்படிக்கையை படையினர் மீறியமைக்கும், காரைநகர் பொதுமக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளனர்.

## பிரிட்டனிடம்....

சந்திர விக்கிரமசிங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பல்வேறு காரணங்களுக்காக மூத்த கடற்படைத் தளபதிகள் இந்த கொள்வனவு யோசனைக்கு சாதகமாக இருக்கவில்லை. இருப்பினும் சிறிலங்கா இராணுவத்திற்கு கிடைக்கப்போகும் வெள்ளை யானை போன்ற அரிதான பொருளை இழக்கவும் அவர்களுக்கு விருப்பமில்லை.

இதற்காக தயாசந்தகிரி தலைமையிலான கடற்படைக் குழு உள்ளிட்டோர் இங்கிலாந்திற்கு இந்தக் கொள்வனவு தொடர்பாக ஆய்வு செய்யச் சென்றனர். தயாசந்தகிரி முப்படைத் தலைமை அதிகாரியாக இருந்தாலும், கடற்படைத் தளபதி என்கிற பொறுப்பில் இருப்பதாலும் கொள்வனவுக்கு தற்போது சென்றிருப்பாலும் பிரிட்டனின் இளநிலை இராணுவ அதிகாரிகளே அவரை வரவேற்றனர்.

சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்ய குறிவைத்திருக்கும் சேர் கலகாட் கப்பலானது 16 போர் டாங்கிகள் அல்லது 33 எட்டு தொன் வாகனங்கள், 62 லான்ட் றோவர்கள் ஆகியவற்றை கப்பலின் மேல் டெக்கில் ஏற்றும் திறன் கொண்டவை.

மேலும் 33.8 தொன் வாகனங்கள் 74 லாண்ட் றோவர்கள், 40 இருபது அடி கெண்டெய்னர்களையும், அதன் வாகன டொக் தாங்கும் திறன் கொண்டது. இதில் மேலும் 27 எட்டு தொன் வாகனங்கள், 59 லாண்ட் றோவர்கள் மற்றும் 30 இருபது அடி கொண்டெய்னர்களையும் ஏற்றலாம். இந்நிலையில், தயாசந்தகிரி நேற்று மீண்டும் பிரிட்டன் செல்கிறார். லோர்ட் நெல்சனின் 200ஆம் ஆண்டு விழாவையொட்டி பிரிட்டன் இராணுவம் நடத்தும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கவுள்ளார்.

## வேவ்வேறு.....

தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

த.தே.து.ப.வீரர் - கோணலிங்கம் (கணபதிப்பிள்ளை - கோணலிங்கம் 2ஆம் வட்டாரம் ஆலங்கேணி என்பவரே சாவடைந்துள்ளார்.

02.09.2001 அன்று திருமலை கடற்பரப்பில் இராணுவத்தின் தாக்குதலின் போது தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

த.தே.து.ப. வீரர் - காளிகரன் (சிவபாலன் - காளிகரன் (குமரன்) 10 ஆம் குறிச்சி விவேகானந்த நகர் திருமலை) என்பவரே வீரச்சாவடைந்துள்ளார்.

07.03.1992 அன்று சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலில் தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். த.தே.து.ப.வீரர் சவுந்தரராஜன் (காளியப்பு சவுந்த்ராஜன் (தயா) பாரதிபுரம் கிளிவெட்டி த.மு மல்லிகைத்தீவு கிளிவெட்டி) என்பவரே வீரச்சாவடைந்துள்ளார்.

18.04.2003 அன்று தமிழ் முஸ்லிம் கலவரத்தின் போது சிறிலங்கா இராணுவத்தினாலும், முஸ்லிம் காடையர்களினாலும் தாக்குதலுக்குள்ளாகி தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

த.தே.து.ப. வீரர் - ரவிச்சந்திரன் (மகேந்திரன் - ரவிச்சந்திரன் ஊசிநாதன் சம்பூர் என்பவரே வீரச்சாவடைந்துள்ளார். இம் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## கண்காணிப்புக்குழுவின்....

பிற்பகல் 2.50 மணியளவில் வெலிக்கந்த மருத்துவமனையை அண்டிய ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தைத் தாண்டி போராளிகளின் வாகனம் பயணித்துக் கொண்டிருந்த போது போராளிகளின் வாகனத்தை இலக்கு வைத்து, பாலம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்ணிவெடி, பாலத்தின் ஊடே வாகனம் பயணிக்கையில் வெடிக்க வைக்கப்பட்டது.

அப்போது வாகனத்திலிருந்த போராளிகளில் பெண் போராளி ஒருவர் காயமடைந்தார். வாகனம் சேதத்துக்குள்ளானது. தாக்குதல் இடம்பெற்ற இடத்தின் அருகாமையில் சிறிலங்காப் படையினரின் படை நிலைகளும் வீதியோர காவல் நிலையங்களும் அமைந்துள்ளன.

இத்தாக்குதல் சம்பவம் பற்றி அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவிக்கையில், போராளிகள் மீதான இத்தாக்குதலானது இராணுவத்தினரின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க தெரிவிக்கையில்:-

பிற்பகல் 3.00 மணியளவில் வெலிக்கந்த செவனப் பிட்டியாவிற்கும், போவத்தை பகுதிக்கும், இடையில் இராணுவப் பாதுகாப்புடன் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் வாகனம் மீதுகண்ணிவெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் எனினும் கண்ணி வெடி இலக்கிலிருந்து புலிகள் பயணம் செய்த வாகனம் தப்பித்துக் கொண்டதாகவும், குறிப்பிட்டார். தாக்குதல் காரணமாக வாகனத்தின் கண்ணாடிகள் நொறுங்கியதாகவும் அதில் விடுதலைப்புலிகளின் பெண் போராளி ஒருவர் சிறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும், அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் வாகனம் தொடர்ந்து இராணுவப் பாதுகாப்புடன் பயணித்து மட்டக்களப்பை சென்றடைந்திருப்பதாகவும், அவர் மேலும் கூறினார்.இந்த வாகனத்தில் விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட 50 போராளிகள் மட்டக்களப்பை நோக்கி பயணித்ததாக விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அஞ்சடி வானில் ஆங்கில வெள்ளம்

இங்லீஷ் வேர்க்ஷொப்

122, வில்சன் வீதி, கிளிநொச்சி.

வளர்ந்தோருக்கும், சிறுவர்களுக்குமான

புதிய பிரிவுகள்

விரைவில் ஆரம்பம்

பதிவுகள்:-இன்றிலிருந்து மேற்கொள்ளப்படும்.

(5942)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 திகதி அச்சிட்டு வெியிடப்பட்டது